# உள்ளூர் நிறுவனக் கையேடு

shepherds
GLOBAL CLASSROOM

பதிப்புரிமை © 2022 மேய்ப்பர்களின் உலகளாவிய வகுப்பறை
இலவசமாக பதிவிறக்கம் செய்ய https://www.shepherdsglobal.org/downloads இணையதளத்தை அணுகவும்.

வேறு விபரம் கொடுக்கப்பட்டிருக்கும் இடங்கள் தவிர்த்து இந்தப் பாடத்தொடர் கிரியேட்டிவ் காமன்ஸ் ஆட்ரிபியூஷன் நான் கமர்ஷியல்-நோ டெரிவேடிவ்ஸ் 4.0 இன்டர்நேஷனல் லைசென்ஸ் (CC BY-NC-ND 4.0)-ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது. https://creativecommons.org/licenses/by-nc-nd/4.0/

இந்தப் பாடத்தொடரை அச்சிட்டும், மின்னணு வடிவிலும் இலவசமாகப் பிரதி எடுத்து விநியோகிக்கலாம். ஆனால், இதில் மாற்றங்கள் செய்யவோ, இலாபத்திற்கு விற்கவோ கூடாது (அச்சிடும் செலவுக்குக் கொடுக்கலாம்). கல்வி நிறுவனங்கள் கல்விக் கட்டணம் வசூலித்தாலும், இந்தப் பாடதொடரை இலவசமாகப் பயன்படுத்தலாம்/பிரதி எடுக்கலாம். மேலும் தகவலுக்கு, www.shepherdsglobal.org/copyright என்ற இணையதளத்தை அணுகவும்.

முதன்மை ஆசிரியர்: Dr. ஸ்டீஃபன் K. கிப்சன்

# பொருளடக்கம்


பயிற்சிக்காக இந்தக் கையேட்டைப் பயன்படுத்துதல் 5

1. உள்ளூர் ஊழியப் பயிற்சியின் முக்கியத்துவம் 7

2. மேய்ப்பர்களின் உலகளாவிய வகுப்பறை (SGC) - அறிமுகம் 13

3. போதகராகும் திறமையுள்ளவரின் தகுதிகள் 17

4. நம் மாணவர்களைப் புரிந்து கொள்ளுதல் 21

5. நல்ல கற்பிக்கும் முறைகள் 25

6. SGC பாடத்தொடர்களை கற்றுக்கொடுத்தல் 29

7. ஆசிரியர்களைக் கண்டறிதல் 33

8. உள்ளூர் மேய்ப்பர் நிறுவனத்தை இயக்குதல் 37

SGC - யின் ஆன்லைன் உதவி உபகரணங்கள் 44

மேய்ப்பரின் உலகளாவிய வகுப்பறை பாடத்தொடர் விபரங்கள் 45

# பயிற்சிக்காக இந்தக் கையேட்டைப் பயன்படுத்துதல்



முக்கியமாக இந்தக் கையேடு, பயிற்சியாளர்கள், நிர்வாகிகள் மற்றும் உள்ளூர் ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக விளங்கும். சில சமயங்களில், உள்ளூர் இன்ஸ்டிட்யூட்-களின் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளைப் பயிற்றுவிக்கவும் இந்தக் கையேட்டை ஒரு பாடத்தொடராகப் பயன்படுத்தலாம். இதன் தனிப்பட்ட பகுதிகளை குறிப்பிட்ட ஒரு தலைப்பைப் பற்றி கற்பிக்கவோ அல்லது மேய்ப்பரின் உலகளாவிய வகுப்பறையை அறிமுகப்படுத்தவோ பயன்படுத்தலாம்.

ஒரு பயிற்சியில் இகையேடு முழுவதையும் கற்பிக்க சுமார் ஆறு மணிநேரமாகும். பயிற்சியாளர்கள் அவ்வப்போது நிறுத்தி, பாடங்களைக் கலந்தாலோசிக்க உதவ வேண்டும்.

பயிற்சி பெறுபவர்கள் வேதாகமம், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் இந்தக் கையேடு ஆகியவற்றைக் கொண்டு வர வேண்டும்.

பயிற்சியாளர்கள் பலவிதமான SGC பாடத்தொடர்களைக் கொண்டு வந்து மாணவர்கள் ஆய்வு செய்யுமாறு கொடுக்கவேண்டும். ஒவ்வொரு பாடத்தொடர் வகையிலும் குறைந்தது மூன்று பிரதிகள் தேவைப்படும். அப்போதுதான் மாணவர்கள் மூன்று பேர் கொண்ட குழுக்களாக ஒருவருக்கொருவர் கற்றுக்கொடுக்க முடியும்.

பயிற்சியாளர்கள் 6-ம் அத்தியாயம் வரை கற்பித்து முடிந்ததும் மாணவர்கள் SGC பாடத்தொடர்களைப் பார்த்து, அவற்றின் முன்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைக் கவனிக்க வேண்டும். அவற்றை மற்ற மாணவர்களுடன் கலந்தாலோசித்து, நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

செயல்முறை கற்பித்தலும், பயிற்சி செய்தலும் இப்பயிற்சிக்கு மிகவும் அவசியம். பாடத்தொடர்களில் உள்ள மூன்று பாடங்களைப் பயிற்சியாளர் கற்பிப்பதன் மூலம் எப்படிக் கற்றுக்கொடுப்பது என்பதை செயல்முறையாகக் கற்பிக்கலாம். வெவ்வேறு பாடத்தொடர்களிலிருந்து பாடங்களை எடுத்தி நடத்திக் காண்பித்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட பயிற்சியாளர்களோ அல்லது விரைவில்

கற்றுக்கொள்ளும் மாணவர்களோ இருந்தால், பலவிதமான முறைகளை செயல்படுத்தி அவர்களும் கற்பிக்கலாம்.

செயல்முறையாக கற்றுக் கொடுத்ததைக் கவனித்த பின், மாணவர்கள் தாங்கள் கற்பித்து பயிற்சி செய்ய வேண்டும்.

குறைந்தபட்சம் பயிற்சி இவ்விதமாக இருக்க வேண்டும்: மாணவர்களை மூன்று பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கவும். குழுவில் உள்ள ஒரு மாணவர் 30 நிமிடங்களுக்குள் மற்ற இரு மாணவர்களுக்கும் ஒரு பாடத்தைக் கற்பிக்க வேண்டும். இப்படி 90 நிமிடங்களுக்குள் மூன்று மாணவர்களில் ஒவ்வொருவரும் கற்பித்து முடித்து, மற்ற இரு மாணவர்களும் பயிற்சி செய்ய வைக்கலாம்.

பயிற்சியின்போது, மாணவர் பயிற்சிக்கென்று கூடுதலாக ஒரு நாள் நியமித்து, மாணவர்களை பாடம் நடத்தச் சொல்லி, ஆசிரியர்களும் மற்ற மாணவர்களும் அவர் நடத்தியதைப் பற்றிய கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள வைக்கலாம். பயிற்சிக்கென்று கூடுதலாக ஒரு நாள் தேவையானால் இன்னொரு நாளை தேர்வு செய்து அன்று வைத்துக்கொள்ளலாம். கூடுதல் நேரம் கொடுத்தால் மாணவர்கள் ஆயத்தம் செய்ய உதவியாக இருக்கும்.

# அத்தியாயம் 1

# உள்ளூர் ஊழியப் பயிற்சியின் முக்கியத்துவம்

## அறிமுகம்

**சபை போதிக்க வேண்டும்**. தம்முடைய கட்டளைகளை எங்கும் சென்று போதிக்க வேண்டுமென்று இயேசு சபைக்கு கூறினார் (மத்தேயு 28:19). மேய்ப்பர் போதிக்கிறவராக இருக்க வேண்டுமென்று பவுல் கூறினார் (1 தீமோத்தேயு 3:2). இந்தப் போதனை சீஷராக்கும் பணியின் ஒரு பகுதியாகும். மக்கள் விசுவாசிகளாக தேவனுடைய மகிமைக்காக எப்படி வாழ வேண்டுமென்று சபை கற்றுக் கொடுக்கிறது. இந்தப் போதனை விசுவாசிகள் இருக்கும் எல்லா இடத்திலும் நடக்க வேண்டும். வலுவான சபைகள் தங்கள் மக்களுக்குப் போதிக்கத் தேவையான வேதாகம சத்தியங்களையும், நடைமுறை முறைமைகளையும் கொண்டுள்ளன.

**சபை பயிற்றுவிக்க வேண்டும்.**

> அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி (2 தீமோத்தேயு 2:2).

போதிக்க வேண்டியது அவசியமாக இருப்பதால் பயிற்சியும் அவசியமாகிறது. மற்றவரகளுக்குப் போதிக்கத்தக்க மனுஷர்களுக்கு பயிற்சி கொடுக்குமாறு பவுல் தீமோத்தேயுவுக்குச் சொன்னார் (2 தீமோத்தேயு 2:2). பயிற்சி என்பது ஒரு தகவலை கற்பிப்பதோ, விசுவாசிகளின் சொந்த நன்மைக்காக போதிப்பதோ மட்டுமல்ல. பயற்சியானது விசுவாசிகள் மற்றவர்களுக்கு உதவ அவர்களை ஆயத்தப்படுத்துகிறது.

ஊழியப் பயிற்சியின் முக்கியத்துவத்தை இயேசு செயல்படுத்திக் காண்பித்தார். தம் ஊழியத்தின் ஆரம்பத்தில், அவர் சபையை வழிநடத்தவும், விரிவாக்கவும் கூடிய சிலரைத் தெரிந்தெடுத்தார். திரளான கூட்டத்தினருக்கு போதிப்பதிலேயே அவர் தம் நேரம் முழுவதையும் செலவிட்டு விடவில்லை; மாறாக, அடிக்கடி அந்தப் பன்னிரண்டு தலைவர்களைப் பயிற்றுவிக்க நேரமெடுத்துக் கொண்டார். இப்படித் தாம் பயிற்றுவித்தவர்கள் மூலம் தொடர்ந்து தம் ஊழியம் நடைபெறச் செய்தார்.

**உள்ளூர் ஊழியங்கள் நடத்தக் கூடிய ஒரு பயிற்சித் திட்டத்தை மேய்ப்பரின் உலகளாவிய வகுப்பறை கொடுக்கிறது**.

# உள்ளூர் ஊழியப் பயிற்சியின் நோக்கங்கள்

## போதகர்களைப் பயிற்றுவித்தல்

போதகர்கள் உபதேசத்திலும், வேதாகம வியாக்கியானத்திலும், பிரசங்கிப்பதிலும், சீஷத்துவ முறைமைகளிலும் பயிற்றுவிக்கப்பட வேண்டும். உலகெங்கும் உள்ள ஆயிரக்கணக்கான சபைகளை நடத்தும் போதகர்கள் அச்சிடப்பட்ட சில புத்தகங்களை வைத்திருக்கிறார்களே ஒழிய நோக்கம் சார்ந்த பயிற்சி எதுவும் கொடுப்பதில்லை. அநேக ஆசிரியர் களே பயிற்சி பெற்றிருப்பதில்லை என்பதால் மற்றவர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டுமென்றே அவர்களுக்குத் தோன்றுவதில்லை.

உலகெங்கும் போதகராகும் திறமை படைத்த பலருக்கு வேதாகமக் கல்லூரி செல்ல முடிவதில்லை. பல வருடங்கள் தங்கள் குடும்பங்களையும், வேலைகளையும், ஊழியங்களையும் விட்டு எங்கோ வெளியிடங்களில் நடக்கும் வகுப்புகளுக்குச் செல்வது நடைமுறையில் அவர்களுக்கு சாத்தியாமவதில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு உள்ளூரிலேயே பயிற்சி அளிப்பது அவசியம்.

## சாட்சிகளைப் பயிற்றுவித்தல்

தேவனுடைய இரட்சிக்கும் கிருபையை அனுபவித்த யாரும் சுவிசேஷம் அறிவிக்கத் தகுதியானவர்களே. தேவன் தங்களுக்குச் செய்ததை அவர்கள் மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டும். குறிப்பாக அவர்களை அறிந்தவர்களுக்கு மற்றும் அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றத்தைக் காண்கிறவர்களுக்கு அவர்களுடைய சாட்சிகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இருப்பினும், சில சமயங்களில் ஒருவரால் சுவிசேஷத்தின் முக்கியக் கருத்துக்களை விளக்கிச் சொல்ல முடிவதில்லை. அந்த நபரின் சாட்சிக்கு சம்பந்தமே இல்லாதவர்களிடம் அவர் பேசும்போது, அதே மாற்றம் எப்படித் தங்கள் வாழ்க்கையில் உண்டாகும் என்று அவர்களால் தொடர்புபடுத்திப் பார்க்கவே முடியாது.

பல வருடங்களாக விசுவாசியாக இருக்கும் ஒருவரால் கூட தம் சமுதாயத்தில் சுவிசேஷம் அறிவிப்பது கூடாத காரியமாக இருக்கலாம். காரணம், கிறிஸ்தவத்தைப் பற்றிய கேள்விகளுக்கு அவரால் பதில் சொல்ல முடியாததாக இருக்கலாம். இந்த விசுவாசிக்கு தான் மாற்றமடைந்தது தெரியும், ஆராதனை உணர்வு இருக்கும், மற்றும் கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்கும் மற்றவர்களுடன் ஐக்கியம் கொள்வது எப்படி எனபதும் தெரியும், ஆனால் இவற்றை மற்றவர்களுக்கு விளக்கிச் சொல்ல முடியாது.

சில சமயங்களில் ஒரு சமுதாயத்தில் இருப்பவர்கள் கிறிஸ்தவத்தைப் பகைக்கும் ஒரு மதத்தைச் சார்ந்தவர்களாக இருக்கலாம். ஒருவேளை அவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றி நல்வாழ்க்கை நடத்துபவர்களை மதிக்கக் கற்றுக்கொள்ளலாம், அதேசமயம் அவர்கள் கிறிஸ்தவ விசுவாசத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

சுவிசேஷத்தின் கோட்பாடுகளையும், சுவிசேஷத்திற்கு ஆதாரமான அடிப்படை உபதேசங்களையும் கற்றுக்கொள்வதன் மூலம் ஒருவர் திறம்படைத்த சாட்சியாக மாறலாம்.

## சபையைப் பாதுகாத்தல்

நல்ல போதகத்தின் மூலம் தங்கள் சபையைக் காத்துக் கொள்ள வேண்டியது ஆசிரியர் களின் பொறுப்பு (தீத்து 1:9-14). கள்ளச் சபைகளும், கள்ள மதங்களும் மக்களைக் குழப்பி, வஞ்சிக்கத் தங்கள் கருத்துக்களைப் பயன்படுத்துகின்றன. முன்பு இரட்சிக்கப்பட்ட அநேகர் பின்னர் கள்ளச் சபைகளுக்கு நேராக நடத்தப்படுவது வருந்தத்தக்க ஒன்று.

ஆசிரியர் வேதாகம உபதேசங்களை சபையினருக்குப் போதிக்க வேண்டும், அப்போதுதான் அவர்கள் தங்கள் விசுவாசத்தில் நிலைநிற்பார்கள். அந்தப் போதனை நோக்கமும், அமைப்பும் சார்ந்ததாக இருந்து, சபையிலுள்ள எல்லோரையும் சென்று சேரும் விதத்தில் பல நிலைகளில் கொடுக்கப்பட வேண்டும்.

## ஊழியக் குழுவை விரிவாக்குதல்

விளையாட்டுக் களத்தில் இறங்காத சில வீரர்கள் எப்போதுமே ஒரு விளையாட்டு அணியில் இடம் பெற்றிருப்பார்கள். பெஞ்ச் வீரர்கள் எனப்படும் அவர்கள் முன்னணி விளையாட்டு வீரர்களை விட வயதில் சிறியவர்களாகவோ அல்லது அனுபவத்தில் குறைந்தவர்களாகவோ இருக்கலாம், எப்படியிருந்தாலும் அவர்கள் பயிற்சி எடுத்துக் கொண்டிருபபார்கள். அவர்களில் சிலருக்கு குறிப்பிட்ட நேரங்களில் தேவைப்படும் சில திறமைகள் இருக்கும்.

ஆரோக்கியமாக வளரும் ஒரு சபையிலும் இவ்விதமான "அடுத்தநிலை" உறுப்பினர்கள் இருக்க வேண்டும். தலைமைத்துவ பொறுப்புகள் அனைத்திலும் ஆட்கள் இருப்பதால், அணி முழுமையடைந்திருக்கிறது என்று நினைப்பது தவறு. தலைவர்கள் புதிய ஊழிய வடிவங்களைத் தொடங்க உதவாத வரை அந்த ஊழியம் மட்டுப்படுத்தப்பட்டு, தொடர்ந்து வளராமல் போய்விடுகிறது.

ஆரோக்கியமான ஒரு சபையில் "அடுத்தநிலை" மக்கள் இருக்க வேண்டும். அவர்கள் வளர்ந்து கொண்டும் பயிற்சி எடுத்துக் கொண்டும் இருக்க வேண்டும். அதற்கு உள்ளூர் பயிற்சி மிக அவசியம். ஆகவே, ஊழியப் பயிற்சி என்பது ஊழியப் பொறுப்புகளை வகிக்கக் கூடியவர்களுக்கு மட்டும் கொடுக்கப்படுவது அல்ல.

உள்ளூர் பயிற்சி அளிப்பது போதகரின் வேலை. போதகரே எல்லாவற்றையும் செய்ய முடியாமல் இருக்கலாம், ஆனால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும், அதை உற்சாகப்படுத்தவும் வேண்டும். பல்வேறு பொறுப்புகளை ஏற்று நடத்தக் கூடிய ஒரு குழு அவருக்கு அவசியம்.

> மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைகொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார் (எபேசியர் 4:11–15).



உள்ளூர் சபையில் இருப்பவர்கள் சபையின் பணியை நிறைவேற்றத்தக்கதாக தேவன் அவர்களுக்கு வரங்களையும், திறமைகளையும் கொடுக்கிறார். தன் மக்களை நோக்கத்துடன் வளர்க்கும் பொறுப்பை சபை ஏற்க வேண்டும்.

## தற்சார்புடைய உள்ளூர் சபையை பலப்படுத்துதல்

தற்சார்புடைய உள்ளூர் சபை என்பது தங்களால் நடத்தப்பட்டு, தங்களுடைய பொறுளாதார உதவியோடு தாங்களே சொந்தமாகக் கொண்டிருக்கும் சபைகளைக் குறிக்கிறது. அது வெளியில் இருந்து வரும் உதவி அல்லது வழிநடத்தலை சார்ந்திருப்பதில்லை. சபைகள் தங்களுக்குள்ளேயே கொண்டிருக்கும் சொந்த பலம் சபைகளின் ஆரோக்கியத்திற்கும், வளர்ச்சிக்கும் மிக முக்கியமானது.

தற்சார்புடைய உள்ளூர் சபை அந்ததந்த கலாச்சாரத்திற்கு ஏற்ப அமைந்திருக்கும், வெளிநாட்டு சபையாக இருக்காது.

ஆரோக்கியமான ஒரு தற்சார்புடைய சபையில் இருக்கும் சாதகமான காரியங்கள்:

1. அது தன் கலாச்சாரத்தில் இருப்பவர்களுக்குப் பயனுள்ள விதத்தில் சுவிசேஷம் அறிவித்து, அவர்களை சீஷராக்குகிறது.

2. வெளியில் இருந்து வரும் உதவிகளை நாடாமல் அந்த சபை கிறிஸ்துவின் சரீரமாக வளர்ந்து செயல்படுகிறது.

3. தலைவர்கள் முழு ஆற்றலையும் பெற்று வளர்கிறார்கள்.

4. உள்ளூரிலிருந்து பங்கேற்பவர்கள் உதவி செய்து, ஊழியத்தை நடத்த உதவியாக இருக்கிறார்கள்.

ஒருசில தற்சார்பு சபைகள் ஆரோக்கியமானதாக இருப்பதில்லை, அவர்கள் உபதேசத்தில் உறுதியாக நிற்காததும், வேதாகமத் தரத்தின் அடிப்படையில் கிறிஸ்தவ வாழ்க்கை வாழாததுமே அதற்குக் காரணம். தங்களுடைய வல்லமையான மற்றும் சீரான சாட்சியின் மூலம் தங்கள் சமுதாயத்தினர் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தத் தவறிவிடுகிறார்கள். தாலந்துள்ளவர்களும் நல்ல குணமற்றவர்களுமான தலைவர்களால் அப்படிப்பட்டவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். தலைமைத்துவ மேம்பாட்டிற்கான திட்டம் எதுவும் அவர்களிடம் இருக்காது. அப்படிப்பட்டவர்களுக்கு உள்ளூர் ஊழியப் பயிற்சி அவசியம்.

சிலசமயங்களில், ஒரு சபை இறுதியில் தற்சார்பு உள்ளூர் சபையாக மாறும் இலக்குடன் முதலில் வெளிநாட்டு மிஷினரிகளால் தொடங்கப்பட்டதாக இருக்கலாம். அதன் வளர்ச்சியை உள்ளூர் உதவி மற்றும் உள்ளூர் தலைவர்களின் அதிகரிக்கும் பொறுப்புகளைக் கொண்டு அளவிடலாம்.

உபதேசத்தைக் கற்றுக்கொடுக்கிற, நடைமுறை வாழ்க்கையில் விசுவாசத்தைக் கைக்கொள்கிற மற்றும் நல்ல ஊழிய முறைகளையும், திட்டங்களையும் உருவாக்குகிற உள்ளூர் தலைவர்கள் வளர்ச்சியடைய உள்ளூர் பயிற்சி அவசியம்.

## சபைகளை நிறுவுதல்

மற்ற சமுதாயங்களுக்கு சுவிசேஷத்தைக் கொண்டு செல்லாமலே அநேக சபைகள் பல ஆண்டுகளாக இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பது வருந்தத்தக்க ஒன்று. சபைகள் சுவிசேஷகர் குழுக்களை பயிற்றுவித்து சபைகள் இல்லாத இடங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். புதிதாக இரட்சிக்கப்பட்டவர்களை ஒரு சபையாக மாற்றுவதே அத்தகைய குழுக்களின் இலக்காக இருக்க வேண்டும்.

இரட்சிக்கப்பட்டவர்களின் குழுக்கள் சபையாக மாறும்படி உதவி செய்ய சில சுவிசேஷகர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். அவர்கள் புதிய விசுவாசிகளுக்கு கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது எப்படி என்று கற்பித்து அவர்களை சீஷர்களாக உருவாக்க வேண்டும். அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களை சுவிசேஷம் அறிவிக்கவும், ஊழியப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளவும் பயிற்றுவிக்க வேண்டும்.

பெரும்பாலான புதிய சபைகள் உள்ளூர் நபர்களால்தான் நடத்தப்படும், வெளியிலிருந்து தங்கள் சமுதாயத்தில் வந்து தங்கியிருக்கும் போதகர்களால் நடத்தப்படுவதில்லை. கல்வித் தகுதியுடன் இருக்கும் பெரும்பாலான போதகர்கள் ஒரு புதிய சபைக்கு போதகராக இருக்கவோ அல்லது சிற்றூரில் ஊழியம் செய்யவோ விரும்புவதில்லை. ஆகவே, தேவனால் ஒரு சபையை நடத்தும்படி அழைக்கப்பட்ட உள்ளூர் விசுவாசிகளுக்கு ஊழியப் பயிற்சி கொடுப்பது அவசியம்.

## மிஷினரிகளை ஆயத்தப்படுத்துதல்

மிஷினரி என்பவர் சுவிசேஷத்தின் தாக்கத்தை பரப்பும் நோக்கத்துடன் சபையினால் இன்னொரு இடத்திற்கு அனுப்பப்படுபவர் ஆவார். *மிஷினரி* என்னும் பதம் பொதுவாக இன்னொரு நாடு மற்றும்/அல்லது கலாச்சாரத்திற்குச் செல்பவரைக் குறிக்கிறது, அதேசமயம் தன்னுடைய நாட்டிலேயே உள்ள வேறொரு சமுதாயத்தின் மத்தியில் செல்பவரையும் மிஷினரி எனலாம்.

உலகின் சில பகுதிகளில் சுவிசேஷம் மிகத் தீவிரமாகப் பரவி வருகிறது. அதற்குக் காரணம் தங்கள் நாட்டிலுள்ள வேறொரு பகுதிக்குச் சென்று ஊழியம் செய்யும் மிஷினரிகளே. அப்படிப்பட்டவர்களுக்கு பயிற்சி கொடுப்பதால் அவர்களுடைய செயல்திறனும், உபதேசத்தில் நிலைத்திருக்கும் தன்மையும் உயரும்.

10/40 வின்டோ என்பது பூமத்திய ரேகைக்கு 10 டிகிரி தெற்காகவும், 40 டிகிரி வடக்காகவும் உள்ள பகுதியைக் குறிக்கிறது. இதில், சீனா, இந்தியா உள்ளிட்ட தெற்கு ஆசியாவும், வட ஆப்பிரிக்காவும் அடங்கும். இந்த 10/40 வின்டோ உலக மக்கள்தொகையில் 2/3 பகுதியைக் கொண்டுள்ளது. 10/40 வின்டோவில் உள்ள 80% -ற்கும் மேற்பட்டோருக்கு இன்னும் சுவிசேஷம் சென்றடையவில்லை.

உலக நாடுகள் சிலவற்றின் பெரும் நகரங்களில் பல ஆண்டுகளாக சபைகள் இருந்து வந்தபோதும், இன்னும் அவற்றின் பெரும்பாலான பகுதிகளுக்குச் சுவிசேஷம் போய்ச் சேரவில்லை. அங்குள்ளவர்களுக்கு ஒரு சபையில் பல ஆண்டுகளாக எப்படி ஊழியம் செய்வது என்பது தெரிந்திருக்கலாம். அதேசமயம், ஒரு புதிய இடத்தில் ஊழியம் தொடங்கத் தெரியாது. அவர்கள் ஒரு சபைக் கட்டிடத்திற்குள் உள்ளவர்களிடம் பேசுவதற்கு மட்டுமே அறிந்திருப்பார்கள். சுவிசேஷத்தின் செய்தியை எடுத்துக் கொண்டு, தங்கள் வாழும் பகுதிகளில் விசுவாசிகளின் குடும்பத்தை உருவாக்கும் நோக்கத்துடன் செல்லும் மிஷினரிகளை சபை பயிற்றுவிக்க வேண்டும்.

# அத்தியாயம் 2

# மேய்ப்பர்களின் உலகளாவிய வகுப்பறை (SGC) - அறிமுகம்

## மேய்ப்பர்களின் உலகளாவிய வகுப்பறை தரிசனம்

உலகின் எல்லாப் பகுதிகளிலும் உள்ளூர் ஊழியப் பயிற்சி நடத்தி கிறிஸ்துவின் சரீரத்தை ஆயத்தப்படுத்துவதே SGC-யின் தரிசனமாகும்.

ஊபர் என்னும் டாக்ஸி நிறுவனம் தினமும் 5.5 மில்லியன் பேரை ஃபோனில் அழைக்கிறது. அதற்கு அந்த நிறுவனத்தில் பல ஆயிரக்கணக்கான டிரைவர்கள் இருக்க வேண்டும், அவர்களிடம் காரும் இருக்க வேண்டும். அந்த ஆயிரக்கணக்கான கார்களை ஊபர் நிறுவனம் வாங்கியிருக்கவில்லை. மாறாக, உள்ளூர் டிரைவர்கள் தங்கள் கார்களில் ஊபர் பயணிகளை அழைத்துச் செல்லும்படி அவர்கள் பணியமர்த்தப்பட்டனர். அதன் மூலம் தங்கள் தொழிலில் இருந்த பணியாள் பிரச்சனையை சரிசெய்தார்கள். அதுபோல, போதகர்களாகும் திறமையுடன் இருப்பவர்களை ஆயத்தப்படுத்தும் விதத்தில் SGC அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கிறது. தேவன் உள்ளூர் விசுவாசிகளுக்கு போதிக்கும் திறமையும், விருப்பமும் கொடுத்திருக்கிறார்.

## உபதேச அடித்தளம்

SGC எந்தவொரு சபைப்பிரிவையும் சார்ந்ததல்ல. நைசின், கால்சிடோனியன், மற்றும் ஏதனாஷியன் விசுவாசப் பிரமாணங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சரித்திரபூர்வமான திரித்துவ உபதேசத்தைக் கொண்டுள்ளோம். வேதாகமத்தின் முழு அதிகாரத்திற்கு உட்பட்டவர்களாக இருக்கிறோம். கிருபை, விசுவாசம் மற்றும் இரட்சிப்பின் சுவிசேஷ உபதேசத்தைக் கொண்டுள்ளோம். விசுவாசிக்குள் கிரியை செய்யும் தேவகிருபை அவரை பரிசுத்தமான இருதயத்திற்கும், வெற்றியுள்ள வாழ்க்கைக்கும் நேராக நடத்துகிறது என்று நம்புகிறோம்.

# நோக்கத்துடனான பாடத்திட்ட வடிவமைப்பு

உள்ளூர் போதகராகும் திறமை கொண்டவர்களை பயிற்சி ஊழியத்திற்குத் துரிதமாக ஆயத்தப்படுத்த அவர்களுக்கு ஒரு விசேஷித்த பாடத்திட்டம் தேவை. SGC பாடத்திட்டம் பின்வரும் அம்சங்களுடன் விசேஷித்த விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது:

- 20 பாடத்தொடர்களில் சுவிசேஷ உபதேசத்தை முழுவதுமாகக் கொடுக்கிறது.
- தகுதி வாய்ந்த, அனுபவமிக்க, பல கலாச்சாரங்களைச் சேர்ந்த பயிற்சியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.
- எந்தக் கலாச்சாரத்திலும் பயன்படுத்தலாம்.
- தெளிவாகவும், எளிமையான நடையிலும் எழுதப்பட்டுள்ளது.
- சபைப்பிரிவுகள் பாகுபாடின்றி சுவிசேஷ சத்தியத்தை வலியுறுத்துகிறது.
- வாழ்க்கைக்கும், ஊழியத்திற்கும் ஏற்றது, நடைமுறையானது.
- பல்வேறு சூழல்களிலும், எவ்வகை குழுக்களிலும் பயன்படுத்தக் கூடியது.
- எண்ணற்ற மொழிகளில் தயாரிக்கப்பட்டுள்ளது.
- உள்ளூர் சபைகளுக்கு தேவன் கொடுக்கும் வரங்களைப் பயன்படுத்துகிறது.
- தலைவர்களை உள்ளூர் நிகழ்ச்சிகளை நிலைநிறுத்தும் பயிற்சியாளர்களாக ஆயத்தப்படுத்துகிறது.
- மாணவர்கள் மற்றவர்களுக்குப் போதிக்கும் அளவிற்கு அவர்களைத் தீவிரமாக ஆயத்தப்படுத்துகிறது.
- குழுவாகப் படிப்பதற்கென்று உருவாக்கப்பட்டுள்ள இதனை தனிப்பட்ட விதத்தில் படிக்கவும் பயன்படுத்தலாம்.
- மின்னணு வடிவத்தில் இதை இலவசமாகப் பயன்படுத்தலாம்.
- மற்ற பாடபுத்தகங்கள் தேவையில்லை.

பாடங்களை எழுதியவர்கள் பெரும் கல்விப் பயிற்சியும், போதக அனுபவமும், பல கலாச்சார ஊழிய அனுபவமும் கொண்டவர்கள்.

ஊழிய நிறுவனத் திட்டத்திற்கு அவசியமான அனைத்தையும் SGC பாடத்தொடர்கள் கொண்டுள்ளன. ஆசிரியர் குழுக்கள் அல்லது வீட்டு வேதபாட குழுக்கள் போன்ற பலதிறப்பட்ட குழுக்களில் போதிக்க அவற்றைப் பயன்படுத்தலாம்.



உள்ளூர் பயிற்சித் திட்டங்களை இயக்க உள்ளூர் ஆசிரியர்களைத் தீவிரமாகப் பயிற்றுவிக்கும் விதத்தில் பாடத்தொடர்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆவிக்குரிய முதிர்ச்சியும், வேத அறிவும், போதக வரமும் கொண்ட ஒருவரால் விரிவான பயிற்சி எதுவும் இல்லாமலே இந்தப் பாடங்களை நடத்த முடியும்.

கலந்தாலோசிக்க உதவும் கேள்விகள் மற்றும் பயிற்சி வேலைகளுடன் போதிக்க சுலபமாக இருக்கும் விதத்தில் பாடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மாணவர்களும் பயிற்சிக்காக கற்றுக்கொடுக்கக் கூடிய சில பகுதிகள் உண்டு. ஒவ்வொரு பாடத்தொடரிலும் சராசரியாக 160 பக்கங்கள் உண்டு, அவற்றை 7-19 பாடங்களாகப் பிரித்துள்ளோம்.

SGC பாடத்திட்டம் சபையின் பணியை நிறைவேற்ற உதவும் கருவிகளைக் கொண்ட மதிப்புமிக்க ஒரு பெட்டியைப் போன்று உள்ளது.

குறிப்பு: மாணவர்கள் ஓரளவுக்கு வேத ஞானமும், ஆவிக்குரிய முதிர்ச்சியும் கொண்டிருந்தால் மிகவும் உதவியாக இருக்கும். இவை, புதிதாக இரட்சிக்கப்பட்டவர்களை சீஷர்களாக உருவாக்க உதவும் பாடங்கள் அல்ல. அதற்கு, (SGC தயாரித்திருக்கும்) *"கல்டிவேட் டிசைபிள்ஷிப் பாடங்கள்"* (சீஷராக்குதலை வளருங்கள்) என்னும் பாடங்களைப் படிக்கும்படிப் பரிந்துரைக்கிறோம்.

## ஊழியத் தொடர்பு அமைப்பு

**மிஷன் நிறுவனங்கள்/தேசிய ஊழியங்களுடன்** பங்காளராக இணைந்து **மேய்ப்பர்களின் உலகளாவிய வகுப்பறை** உள்ளூர் பயிற்சிகளைக் கொடுக்கிறது. **மிஷன் நிறுவனங்கள்/ தேசிய ஊழியங்கள்** ஒவ்வொன்றும் உள்ளூர் நிறுவனங்களைத் தொடங்க உள்ளூர் சபைகளுக்கு உதவுகின்றன.

மேய்ப்பர்களின் உலகளாவிய வகுப்பறையின்

1. மேய்ப்பர்களின் உலகளாவிய வகுப்பறை
2. மிஷன் நிறுவனம்/தேசிய ஊழியமும்,
3. உள்ளூர் நிறுவனம் ஒன்றாக ஒத்துழைத்து

கிறிஸ்தவ ஊழியர்களைப் பயிற்றுவிக்கிறார்கள்.

## மேய்ப்பர்களின் உலகளாவிய வகுப்பறை

- 20 ஊழியப் பயிற்சி பாடத்தொடர்களைக் கொண்ட தொகுப்பை வழங்குகிறது.
- SGC வலைதளத்தில் இருந்து பாடங்களை பதிவிறக்கம் செய்யும் வசதியையும் கொடுத்துள்ளது.
- பாடத்தொடர்கள், வீடியோக்கள், மற்றும் பயிற்சி உபகரணங்கள் கொண்ட ஒரு SGC செயலியையும் வழங்குகிறது.
- பாடத்தொடர்கள் பல்வேறு மொழிகளில் மொழிப்பெயர்க்கப்படுவதை கண்காணிக்கிறது.

- ஆசிரியர் பயிற்சிக்கான பாடத்தொடரையும் ஏற்படுத்தி, அதில் பயிற்சி பெற்றவர்களை வட்டாரங்களில் நடைபெறும் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்த அனுப்புகிறது.
- பாடங்களை நிறைவு செய்பவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குகிறது.

## மிஷன் நிறுவனங்கள் / தேசிய ஊழியங்கள் உள்ளூர் நிறுவனங்கள்

- நடத்தும் வாய்ப்பை சபைகளுக்குக் கொடுக்கும் பங்கை ஆற்றுகின்றன.
- SGC புத்தகங்களை விளம்பரப்படுத்தி, உள்ளூர் நிறுவனங்களுக்கான ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கின்றன.
- SGC-யுடன் இணைந்து வட்டார பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துகின்றன.
- பாடத்தொடர்களை அச்சிட்டு விநியோகிக்க ஏற்பாடு செய்கின்றன.
- பயிற்சி உபகரணங்களை SGC செயலி மற்றும் வலைதளைத்தில் இருந்து பயன்படுத்தப் பரிந்துரைக்கின்றன.
- ஆலோசனைகளையும், புதிய உபகரணங்களையும் கொடுக்க அவ்வப்போது ஆசிரியர்களைத் தொடர்புகொள்கின்றன.
- சான்றிதழ் வழங்க பாடங்களை படித்து முடித்திருக்கிறார்களா என்று சரிபார்க்கின்றன.

## உள்ளூர் நிறுவனத்தின் பொறுப்பு

- வகுப்புகள் நடக்க இடம் கொடுக்கிறது.
- உள்ளூர் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து, தேவையானால் அவர்களுக்கு உதவுகின்றது.
- மாணவர்களைத் தேர்வு செய்து, பதிவு செய்கின்றது.
- அச்சிடப்பட்ட பாடங்களுக்கான தொகையை செலுத்துகிறது.
- வகுப்புகளைத் திட்டமிட்டு நடத்துகிறது.

மிஷன் நிறுவனம்/தேசிய ஊழியத்திற்கும், உள்ளூர் நிறுவனத்திற்கும் உள்ள தொடர்பைப் பற்றிய மேலும் சில விபரங்களை அத்தியாயம் 8-ல் காணலாம்.

# அத்தியாயம் 3

# போதகராகும் திறமையுள்ளவரின் தகுதிகள்

## ஒரு விசேஷித்த ஊழியம்

ஆசிரியர்கள் விசேஷித்தவர்கள். ஆசிரியர்கள் தேவனிடம் விசேஷித்த விதத்தில் கணக்கு ஒப்புவிக்க வேண்டும், உண்மையாக இல்லாவிட்டால் ஆக்கினைக்கு ஆளாகவும் வேண்டும் என்பதால் நம்மில் அநேகர் போதாகராகாதிருப்பது நல்லது என்று அப்போஸ்தலனாகிய யாக்கோபு எச்சரிக்கிறார் (யாக்கோபு 3:1).

ஒருவர் தனக்கிருக்கும் அறிவினால் இறுமாப்படைந்து மற்றவர்களை அவமதித்து விடக்கூடும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் எச்சரித்தார் (1 கொரிந்தியர் 8:1). அன்பு நம்மையே உயர்த்திக் காண்பித்துக் கொண்டிருக்காமல் மற்றவர்களைக் கட்டி எழுப்ப நம்மை ஊக்குவிக்கிறது என்றும் சொன்னார். அறிவு படைத்தவர்கள் தங்கள் அறிவு மற்றவர்களைக் காட்டிலும் தங்களை உயர்ந்தவர்களாக்குகிறது என்று எண்ணாமல், அதனை மற்றவர்களுக்கு உதவுவதற்கான கருவியாகக் கருத வேண்டும். அறிவின் மூலம் தங்களுக்கு கனத்தைத் தேடினால், அது தவறான நோக்கமாகும், அவர்கள் தங்களுக்குத் தாங்களே தீமையை வருவித்துக் கொள்வார்கள்.

ஊழியத்தில் எந்தப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள அல்லது போதிக்க விரும்புபவர்களுக்கு இந்த எச்சரிக்கைகள் மிக முக்கியமானவை. ஏனென்றால் அவர்கள் தங்கள் அறிவைக் கொண்டு ஊழியம் செய்வதற்கு முன் கற்றுக்கொள்ள முன்வர வேண்டும்.

## மறுரூபமாக்கும் சத்தியம்

வேதபாடம் படிக்க மாணவர்களிடம் ஒரு விசேஷித்த மனநிலை இருக்க வேண்டும். தங்கள் குணத்தில் எந்த மாற்றத்தையும் செய்யாமலே அவர்கள் அறிவியல் அல்லது கணக்குப் பாடத்தைப் படிக்கலாம். அதிலிருந்து தங்களுக்குக் கிடைக்கும் அறிவைக் கொண்டு மாணவர்கள் எவ்வித மாற்றமும் அடையத் தேவையில்லை. ஆனால், வேதபாட மாணவர்கள் வேதத்தைப் படிக்கும்போது தங்கள் குணம் மாற சவால்விடப்படுவதாக உணர்கிறார்கள். தாங்கள் கற்றுக்கொள்ளும் சத்தியத்திற்கு ஏற்ப பரிசுத்த ஆவியானவர்

தங்கள் குணத்தை மாற்ற தாழ்மையுடன் விட்டுக்கொடுக்க வேண்டும். வேதாகம சத்தியம் மறுரூபமாக்கும் ஒன்றாகும்.

## SGC போதகருக்கான தகுதிகள்

போதகப் பயிற்சி பெறும் மாணவர் ஒருவர் இந்த அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டுள்ள குணங்களைக் கொண்டிருப்பதோடு, உள்ளூர் சபை ஒன்றில் ஈடுபாடு கொண்ட அங்கத்தினராகவும், போதகரால் பரிந்துரைக்கப்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

SGC ஆசிரியர் ஆவிக்குரிய முதிர்ச்சி பெற்றவராகவும், போதக சமர்த்தனாகவும், வேத அறிவு கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

கல்வித் தகுதிகள்: ஆசிரியர் பாடப் புத்தகங்களை வாசிக்கவும், விளங்கிக் கொள்ளவும், விளக்கவும் அறிந்திருக்க வேண்டும். அவர் பெற்றிருக்கும் பட்டம் கற்றுக்கொடுக்கும் முறைகள் மற்றும் ஆழ்ந்த அறிவில் அவரை ஆயத்தபடுத்தும் என்றாலும் ஆசிரியர்கள் மற்றவர்களுக்கு அதே பயிற்சியைக் கொடுக்கும்படி அவர்களை உருவாக்குவதே SGC-யின் தரிசனம். அதனால், ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதில் நாங்கள் கல்வித் தகுதிகளை அதிகம் சார்ந்திருப்பதில்லை. மாறாக, எந்த இடத்திலும் போதகராகும் தகுதி கொண்டவர்களுக்கு ஆவிக்குரிய வரங்களை அருளுமாறு தேவனுடைய உண்மைத்தன்மையைச் சார்ந்திருக்கிறோம். திறம்பட போதிக்கும் வரம் பெற்றவர்களைக் கண்டறிந்து அவர்களை ஆயத்தப்படுத்தவே விரும்புகிறோம்.

கீழேயுள்ள பட்டியல் இதற்கு அவசியமான மற்ற குணங்களைக் கொண்டுள்ளது. அந்தக் குணங்கள் எல்லாவற்றிலும் ஒரு ஆசிரியர் சிறந்து விளங்காமல் இருக்கலாம், ஆனால் நிச்சயமாக அவை அனைத்தையும் வளர்த்துக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இவற்றில் ஒன்று குறைவாக இருந்தாலும் அவர்களுடைய பயன்தன்மை குறையும்.

1. **ஆவியில் முதிர்ச்சியடைந்திருக்க வேண்டும்**. ஆசிரியர் என்பவர் ஆவிக்குரிய பண்புகளின் நல்ல மாதிரியாக இருக்க வேண்டும். போதகரின் கிறிஸ்தவ வாழ்க்கையும், மனப்பான்மைகளும் எப்போதும் ஒரே சீராக இல்லையென்றால், அவர்கள் மாணவர்களுக்கு நல்ல முன்மாதிரிகளாக இருக்க முடியாது.

2. **தேவைப்படும் நேரத்தில் இருக்க வேண்டும்**. ஒருவர் ஏற்கனவே பல வேலைகளில் மிக மும்முரமாக ஈடுபட்டு, அவருக்கு நேரமே இல்லையென்றால், அவர் தொடர்ந்து முறையாக செய்யும் போதக ஊழியத்திற்குத் தேவைப்படும் நேரத்தில் அங்கு இருக்க முடியாது. ஆசிரியர்கள் போதனை செய்வதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதிக தாலந்துகள் படைத்தவர்களுக்கு இந்த ஊழியத்தைக் கொடுக்கக் கூடாது, ஏனென்றால் அவர்களுடைய மற்ற வேலைகள் போதனை செய்வதற்கு இடையூறாக அமைந்து விடக்கூடும்.

3. **நம்பத்தக்கவராக இருக்க வேண்டும்**. ஆசிரியர்கள் தாங்கள் கொடுத்த வாக்கை நிறைவேற்றுபவர்களாக இருக்க வேண்டும். சரியான நேரத்திற்கு வகுப்புக்கு வந்து, முறையான ஒரு கால அட்டவணையைப் பயன்படுத்த வேண்டும். ஆசிரியர் தாமதமாக வந்தாலோ அல்லது வராமல் போனாலோ மாணவர்கள் மன உளைச்சல் அடைவார்கள்.

4. **தன்னம்பிக்கையுடன் இருக்க வேண்டும்**. ஒரு குழுவை எப்படி நடத்த வேண்டும் என்பதைத் தங்களால் கற்றுக்கொள்ள முடியும் என்று ஆசிரியர்கள் நம்ப வேண்டும். அவர்களின் ஒருசில நடவடிக்கைகளைக் கண்காணித்து உதவினாள் அது அவர்களுக்குத் தன்னம்பிக்கையைக் கொடுக்கும்.

5. **முரண்பாடுகளைத் தீர்ப்பவராக இருக்க வேண்டும்**. மற்றவர்கள் மனம் ஒத்துப் போகாமல் பிரச்சனை ஏற்படும்போது ஆசிரியர்கள் சரியான மனப்பான்மையுடன் நடந்து கொண்டு, முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பவராக இருக்க இருக்க வேண்டும்.

6. **போதிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்**. மக்கள் போதகரின் விளக்கங்களைப் புரிந்து கொள்கிறார்களா? ஆசிரியர் மக்களைக் குழப்புகிறவராக இருக்கக் கூடாது.

7. **தேவனுடைய வார்த்தையின் மேல் தாகம் கொண்டவராக இருக்க வேண்டும்.** ஆசிரியர்கள் தேவனுடைய வார்த்தையை அனுபவித்து மகிழ்பவர்களாக இருக்க வேண்டும், அப்போதுதான் மற்றவர்களையும் அவ்வாறு வேதத்தை அனுபவித்து மகிழ அழைக்க முடியும். அவர்கள் தேவனுடனான தங்கள் உறவில் வேதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

8. **தேவனைச் சார்ந்திருக்க வேண்டும்**. ஆவிக்குரிய விளைவுகள் பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே நிகழ முடியும் என்பதை ஆசிரியர்கள் உணர்ந்திருப்பது நல்லது. அதனால் அவர்கள் பரிசுத்த ஆவியானவருடன் ஒத்துழைக்க ஆயத்தமாகவும், தேவன் கொடுக்கும் அபிஷேகத்தைச் சார்ந்தும் வேண்டும். தங்களுடைய விளக்கங்கள் தங்களுடைய திறமையினால் மட்டும் வெற்றியடையும் என்னும் குருட்டு நம்பிக்கை இருக்கக் கூடாது.

9. **ஊழியம் செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும்**. ஆசிரியர்கள் பிறர் தங்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்றிருக்கக் கூடாது. தங்கள் தாலந்துகளை வெளிப்படுத்துவதற்காக ஊழிய வாய்ப்புகளைத் தேடக் கூடாது. தேவைகளை அறிந்து, உடனே உதவ தன்னார்வத்துடன் செயல்பட வேண்டும்.

10. **ஆவிக்குரிய அதிகாரத்தின் கீழ் இருக்க வேண்டும்**. ஆசிரியர்கள் ஆவிக்குரிய காரியங்களில் மற்றவர்களுக்கு கணக்கு ஒப்புவிக்கிறவர்களாக இருப்பது நல்லது. ஆவிக்குரிய தலைவர்கள் காண்பிக்கும் வழியைப் பின்பற்ற வேண்டும்.

11. **சபைக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்**. ஆசிரியர்கள் உள்ளூர் சபைகளில் அர்ப்பணிப்புடன் செயல்படும் அங்கத்தினராக இருக்க வேண்டும். அவர்களின் போதனைகளால் மற்றவர்கள் சபையைப் பாராட்டி, அதற்கு இன்னும் தங்களை அர்ப்பணிக்க முன்வருகிறவர்களாக மாற வேண்டும்.

12. **வெற்றிபெறும் வைராக்கியம் இருக்க வேண்டும்**. வெற்றி பெறும் வைராக்கியம் கொண்ட ஆசிரியர்கள் அவ்வளவு சீக்கிரத்தில் மனம்தளர்ந்து போகமாட்டார்கள். சூழ்நிலைகளுக்கேற்ப தங்களை மாற்றிக்கொள்வார்கள். தாங்கள் மேலும் பயனுள்ள விதத்தில் செயல்பட உதவும் தகவல்களைத் தேடுவார்கள். பிரச்சனைகள் அல்லது வாய்ப்புகள் வரும்போது, முன்னின்று அவற்றைக் கையாளுவார்கள். ஆற்றலும், உற்சாகமும் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

13. **உபதேசத்தைத் துல்லியமாக அறிந்திருப்பார்கள்**. ஒவ்வொரு போதகரும் வேதாகம மற்றும் சுவிசேஷக உபதேசத்தில் நல்ல அடித்தளம் கொண்டிருக்க வேண்டும்.

14. **ஊழிய அனுபவம் மிக்கவர்களாக இருக்கவேண்டும்**. ஆசிரியர்கள் சில காலம் சபை ஊழியத்தில் உண்மையுள்ளவர்களாக ஈடுபாடு கொண்டிருந்திருக்க வேண்டும்.

## அத்தியாயம் 4

# நம் மாணவர்களைப் புரிந்து கொள்ளுதல்

## மதரீதியான தகுதிகள்

SGC-யின் இத்திட்டம் ஊழியப் பயிற்சியை நோக்கமாகக் கொண்டிருப்பதால், மாணவர்கள் கிறிஸ்தவ விசுவாசிகளாகவும், நற்சாட்சி பெற்றவர்களாகவும், தேவனை கனப்படுத்தும் வாழ்க்கைமுறை கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும். அவிசுவாசியான ஒருவர் இந்தப் பாடங்களில் உள்ளவற்றை புரிந்து கொள்ளவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாது.

சுவிசேஷக உபதேசம் உள்ளிட்ட கிறிஸ்தவ விசுவாசத்தின் சரித்திர முக்கியத்துவங்களை மாணவர் விசுவாசிக்க வேண்டும். இந்தத் திட்டம் எங்குமுள்ள கிறிஸ்துவின் சரீரத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஊழியம் செய்யும்படி அமைக்கப்பட்டுள்ளது, ஆகவே தனிப்பட்ட சபைப்பிரிவுகளின் நம்பிக்கைகள் அவசியமில்லை.

மாணவர் ஒரு சபையின் அங்கத்தினராகவும், தன் சபையின் ஆராதனை மற்றும் ஐக்கியங்களில் பங்குபெறுபவராகவும் இருக்க வேண்டும். சபைகளுக்குத் தங்களை அர்ப்பணிக்க முன்வராத மாணவர்கள் ஊழியப் பயிற்சிக்கு உகந்த மாணவர்களாக இருக்க முடியாது. தாங்கள் கற்றுக்கொள்வதை நடைமுறையில் கைக்கொள்ள அனுமதிக்கும் சபைகளில் அவர்கள் அங்கத்தினராக இருப்பது மிகவும் ஏற்றதாக இருக்கும். கொடுக்கப்பட்ட பயிற்சி வேலைகள் சிலவற்றிற்கு மற்ற விசுவாசிகளின் பங்கேற்பும் அவசியமானதாக இருக்கும்.

## தேவையான கல்வித் தகுதி


நன்றாக எழுதப் படிக்கத் தெரிந்த மாணவர்களுக்கு ஊழியம் செய்யும் விதத்தில் உள்ளூர் நிறுவனங்கள் அமைக்கப்பட வேண்டும். அவர்கள் பட்டதாரிகளாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை, ஆனால் நிச்சயமாக அவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களால் பாடங்களைப் புரிந்து கொண்டு, பயிற்சி வேலைகளைச் செய்ய முடியும். இந்த நிலையில் படிக்கக் கூடிய மாணவர்கள் இருந்தால் நிறுவனம் அவர்களுக்கு சான்றிதழ் வழங்கலாம்.

படிக்க விரும்பியும் பயிற்சி வேலைகளைச் செய்ய முடியாத மாணவர்களுக்கு வேறு விதமாக கற்றுக்கொடுக்கலாம். உதாரணமாக, நன்றாக வாசிக்கத் தெரியாத மற்றும்

பயிற்சி வேலைகளைச் செய்ய முடியாத மக்களுக்கு பொதுவான சபைகள் அல்லது வேதபாட குழுக்களை அமைத்து அவர்களுக்குக் கற்பிக்கலாம்.

## நம் மாணவர்களைப் புரிந்து கொள்ளுதல்

உள்ளூர் SGC நிறுவனங்களில் சேரும் மாணவர்கள் மற்ற நிறுவனங்களில் படிக்கும் மாணவர்களிலிருந்து மாறுபட்டிருக்கிறார்கள். அவர்கள் பள்ளியில் படிக்கும் மாணவர்களைப் போன்றவர்கள் அல்ல. பல்கலைக்கழக அல்லது வேதாகமக் கல்லூரி மாணவர்களைப் போன்றவர்களும் அல்ல. ஆசிரியர்கள் இப்படிப்பட்ட மாணவர்களைக் கொண்ட வகுப்புகளுக்கு ஏற்றாற்போல் தங்கள் நடையை மாற்றிக்கொள்ள வேண்டும். இந்த மாணவர்களின் கல்வித்திறன் ஒரு கல்லூரி மாணவனின் கல்வித்திறனை விடக் குறைவாக இருக்கும். அதற்கேற்றாற்போல் ஆசிரியர்கள் தங்கள் விளக்கங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். பயிற்சி வேலையை எப்படிச் செய்வது என்று மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். சோம்பேறித்தனத்தையும், கவனக்குறைவையும் கடிந்து கொள்ளும் அதே நேரத்தில் மாணவர்கள் செய்யும் வேலைகளைப் பற்றிய அவர்களின் விமர்சனங்கள் உதவியாகவும், உற்சாகமளிப்பதாகவும் இருக்க வேண்டுமேயொழிய அவமதிப்பதாக இருக்கக் கூடாது.



தேவன் தனிப்பட்ட நபர்களை ஊழியத்திற்கு அழைக்கும்போது அவர்களுக்குத் தேவையான திறமைகளையும் கொடுக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். மாணவர்கள் ஏற்கனவே தங்கள் ஊழியத்தில் தேவனுடைய அபிஷேகத்தையும் ஆசீர்வாதத்தையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கலாம். அவர்கள் வளர உதவுவது நம் பொறுப்பு. அவர்களைச் சோர்வடையச் செய்வது தவறு.

பெரும்பாலும் எல்லா வயதினரும் SGC மாணவர் குழுக்களில் இருப்பார்கள். சிலர் சமீபத்தில்தான் பள்ளிப் படிப்பை முடித்திருப்பார்கள், மற்றும் சிலர் தாத்தா பாட்டி வயதுடையவர்களாக இருப்பார்கள். சிலர் அநேக ஆண்டுகளாக ஆசிரியர்களாக கூட இருந்திருக்கலாம். சில நேரங்களில் மாணவர்கள் போதகரை விட வயதில் மூத்தவராகவும் இருக்கலாம்.

சமீபத்தில் கல்லூரிப் படிப்பை முடித்த இருபது வயது மாணவர் ஒருவருக்கு அறுபது வயதான போதகரை விட அதிக கல்வித் தகுதி இருக்கலாம். இருப்பினும், எல்லோருக்கும் மரியாதை கொடுக்க வேண்டும். முதிர்ச்சியையும், அனுபவத்தையும் அவமதிக்கும் விதத்தில் கல்வித் தகுதியை கனப்படுத்தக் கூடாது. கல்வித் தகுதி வேண்டும் என்று வலியுறுத்தும் அதே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட வேலையை செய்யத் தெரியாத மாணவர்களை தர்மசங்கடமான சூழ்நிலைக்கு ஆளாக்கக் கூடாது.

## முதிர்-பருவ மாணவர்களின் பண்புகள்

மாணவப் பருவத்தைத் தாண்டி பெரியவர்களாகிவிட்டவர்களைக் குறிக்க முதிர்-பருவ மாணவர்கள் என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. இவர்கள் திருமணமானவர்களாகவும், பிள்ளைகளைப் பெற்றவர்களாகவும் கூட இருக்கலாம். ஏதேனும் ஒரு வேலை அல்லது ஊழியம் செய்து வந்திருக்கலாம். வாழ்க்கை அனுபவங்கள் அவர்களுக்கு நிறையை இருக்கும். இப்படி முதிர்-பருவ நபர்கள் மீண்டும் மாணவர்களாக மாறும்போது உண்மையில் சில தனிப்பட்ட இலக்குகளுக்குத் தங்களை அர்ப்பணிக்கிறார்கள்.

ஆசிரியர் மற்றும் வகுப்பின் நடை முதிர்-பருவத்தினரின் தேவைகளைச் சந்திக்கும் விதத்தில் அமைக்கப்பட வேண்டும்.

1. **முதிர்-பருவ மாணவர்கள் தங்களுக்கு உடனடியாக உதவக் கூடிய பயிற்சி தேவை என்று நினைப்பார்கள்**. அவர்கள் தாங்கள் கற்றுக்கொள்வதை எப்படி கைக்கொள்வார்கள் என்பதை கலந்தாலோசிக்க வேண்டும். இந்த மாணவர்கள் தாங்கள் கற்றுக்கொண்டதை எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறார்கள் என்பதை அவர்களே விவரிக்க வகுப்பில் நேரம் கொடுக்க வேண்டும். ஆசிரியர் மாணவர்களுடன் கலந்துரையாடாமல் முழு நேரமும் பாடத்தை நடத்திக்கொண்டே இருக்கக் கூடாது.

2. **முதிர்-பருவ மாணவர்கள் தாங்கள் மதிக்கப்பட வேண்டுமென்று நினைப்பார்கள்**. தங்களுக்கு ஏற்கனவே முதிர்-பருவ பொறுப்புகள் இருப்பதால் சிறுபிள்ளைகளைப் போல நடத்தப்படுவதை விரும்புவதில்லை. ஆசிரியர்கள் கற்றுக்கொள்பவரின் மனநிலையுடன் மாணவர்கள் சொல்லும் கருத்துக்களை திறந்த மனதுடன் கேட்க வேண்டும். தங்கள் மாணவர்களின் அனுபவத்தையும், அறிவையும் மதிக்க வேண்டும்.

3. **முதிர்-பருவ மாணவர்கள் படிக்கும் விதத்தைத் தாங்களாகவே தேர்வு செய்ய நினைப்பார்கள்**. தங்களின் அனுபவம் மற்றும் குறிக்கோள்கள் காரணமாக ஒரு குறிப்பிட்ட முறையில் படிப்பதுதான் அவர்களுக்கு ஏற்றதாகவும், சுவாரசியமாகவும் இருக்கிறது. தங்களுக்கு சுவாரசியமான விதத்தில் படிக்கவும், சொந்தமாக படிக்கும் முறைகளை உருவாக்கவும் அவர்களுக்கு சுதந்திரம் தேவை.

4. **முதிர்-பருவ மாணவர்கள் வகுப்பிலேயே பயிற்சி செய்ய நினைப்பார்கள்**. மாணவர்கள் பாடம் எடுக்கவும், புத்தகத்தின் சில பகுதிகளை விளக்கவும், கேள்விகளுக்கு பதிலளிக்கவும் ஆசிரியர்கள் அனுமதிக்க வேண்டும். சிலசமயங்களில் மாணவர்கள் தங்கள் அனுபவக் கதைகளையும் பகிர்ந்து கொள்ளலாம். ஆசிரியர்கள் நேரத்தை வீணாக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றாலும், கதை சொல்வது ஒரு மாணவர் தன் கற்றுக்கொண்டதை பயிற்சி செய்யும் ஒரு வழியாக இருக்கலாம் என்பதை உணர வேண்டும்.

5. **முதிர்-பருவ மாணவர்கள் மற்ற மாணவர்களுடன் ஐக்கியத்தை ஏற்படுத்துவார்கள்**. மாணவர்கள் ஒருவருக்கொருவர் மற்றவருடைய வேலையைப் பற்றிச் சொல்வதிலிருந்து கற்றுக்கொள்கிறார்கள். மரியாதை கொடுத்து மரியாதை பெற்றுக்கொள்வார்கள். முதிர்-பருவ மாணவர்கள் சில உரையாடல்களை தங்கள் வாழ்நாள் முழுவதும் மறக்கமாட்டார்கள். அதற்காக வகுப்பை அவ்வப்போது கலந்துரையாடும் சிறு சிறு குழுக்களாகப் பிரிப்பது நல்லது.

6. **முதிர்-பருவ மாணவர்கள் தாங்களாகவே முடிவெடுக்க நினைப்பார்கள்**. தங்களிடமிருந்து வரும் பலவிதமான கருத்துக்களை எல்லோரும் சகித்துக் கொள்ள வேண்டுமென்று எதிர்பார்ப்பார்கள்.

7. **முதிர்-பருவ மாணவர்கள் போதகரை நேசித்து, மரியாதை கொடுப்பார்கள்**. தங்களுக்கும் போதகருக்கும் இருக்கும் அந்தஸ்து இடைவெளி ஒரு பல்கலைக்கழக மாணவருக்கும் பேராசிரியருக்கும் இருக்கும் இடைவெளியைப் போன்று இருக்கக் கூடாது என்று எதிர்பார்ப்பார்கள். அவர்கள் போதகரின் அறிவை மட்டுமல்ல, அவரின் அர்ப்பணிப்புள்ள வாழ்க்கை மற்றும் குணநலன்களையும் ரசிக்க விரும்புவார்கள்.

## மாணவர்களைப் பற்றி கருத்து தெரிவித்தல்

ஆசிரியர் வகுப்பில் பொதுவாகவும், தனிப்பட்ட மாணவர்களிடமும் நேரமெடுத்து நல்ல படிக்கும் வழக்கங்களைப் பற்றிப் பேச வேண்டும். எப்படி ஒழுக்கமாக இருந்து, அனுதின படிக்கும் வேளையைத் திட்டமிடுவது என்பதை மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

பயிற்சி வேலைகள் மற்றும் வருகையை ஆசிரியர் கவனமாக பதிவு செய்ய வேண்டும். பயிற்சியின் முடிவில், அந்தப் பதிவுகள்தான் மதிப்பெண் கொடுக்க உதவும். பயிற்சி நடக்கும்போது, மாணவர்கள் சரியாகப் படிக்கவில்லை என்றால் ஆசிரியர் அவர்களிடம் பேசி நன்றாகப் படிக்க வைக்க வேண்டும்.

பயிற்சி வேலையை எப்படி செய்வது என்பதை மாணவர்களுக்குப் புரிய வைப்பது ஆசிரியரின் முக்கியமான வேலை. நன்றாக செய்யப்படாத பயிற்சிவேலைகளை மீண்டும் மாணவர்களிடமே கொடுத்து, நன்றாக செய்யச் சொல்ல வேண்டும். ஆனால் அதை எப்படி நன்றாகச் செய்வது என்பதை மாணவருக்குப் புரிய வைப்பது ஆசிரியரின் வேலை.

மாணவரின் வருகை அல்லது பயிற்சிவேலைகள் அவருடைய மதிப்பெண் குறைவுக்குக் காரணமாக இருக்கும் பட்சத்தில் ஆசிரியர் அவரிடம் பேசி மதிப்பெண்ணை அதிகரிக்க உதவி செய்ய வேண்டும். பயிற்சியின் முடிவில் தன் மதிப்பெண்ணைப் பார்த்து மாணவர் ஆச்சர்யப்படும்படி வைக்கக் கூடாது.

## அத்தியாயம் 5

# நல்ல கற்பிக்கும் முறைகள்

## வகுப்பின் பாணியை அமைத்தல்

பயிற்சியின் ஆரம்பத்தில், எல்லோரும் பரவசத்துடனும், எதிர்பார்ப்புடனும் இருப்பார்கள். மாணவர்களுக்கு எதை எதிர்பார்ப்பது என்று தெரியாவிட்டாலும், குழுவிலிருந்து தங்களுக்கு உதவி கிடைக்கும் என்று நம்புவார்கள்.

முதல் வகுப்பு மற்ற வகுப்புகளிலிருந்து வித்தியாசமாக இருக்கலாம். ஏனென்றால் அறிமுகப்படுத்திக் கொள்வதும், வகுப்பைப் பற்றிய விபரங்களைச் சொல்வதும் அவசியம். இருப்பினும், முதல் வகுப்புதான் அடுத்தடுத்த வகுப்புகளுக்கான பாணியை அமைத்துக் கொடுக்கும். உதாரணமாக, ஒருவர் முதல் வகுப்பில் பேசவில்லை என்றால், அடுத்த வகுப்புகளிலும் அமைதியாக இருப்பார் என்றே எதிர்பார்க்கப்படும். கலந்துரையாடலில் ஒருவர் முன்னணியில் நின்று பேசுவார் என்றால், அதே நபர் இனிவரும் கலந்துரையாடல்களிலும் ஆதிக்கம் செலுத்துவார் என்று குழுவினர் நினைப்பார்கள். வகுப்பு ஒழுங்கில்லாமல் நடந்தால், அதேபோலத்தான் இனியும் நடக்கும் என்று நினைப்பார்கள். மாணவர்கள் குறைந்த அளவில் மட்டுமே நடக்கும் நிகழ்ச்சிகளில் பங்கேற்பார்கள் என்றால், எதிர்காலத்திலும் அதுவே எதிர்பார்க்கப்படும்.

சில மாணவர்கள் பயிற்சி தாங்கள் நினைத்தபடி நடக்காததால் ஒருசில வகுப்புகளுக்குப் பின்னர் வருவதை நிறுத்திவிடுவார்கள். எல்லோருக்கும் பிடித்த விதத்தில் வகுப்புகளை அமைப்பது கடினம் என்றாலும், படிக்க வேண்டும் என்ற விருப்பத்துடன் வரும் மாணவர்களை திருப்திபடுத்தும் விதத்தில் இருக்க வேண்டும். சரியான விஷயங்களை எதிர்பார்க்கும் மாணவர்கள் ஏமாந்து போகாத விதத்தில் வகுப்புகளை நடத்துவது அவசியம்.

## பலன் பெறுவதைக் குறிக்கோளாகக் கொள்ளுதல்

நம் பயிற்சியின் விளைவாக இறுதியில் பயனுள்ள ஊழியங்களும், சீரான கிறிஸ்தவ வாழ்க்கைகளும் தோன்ற வேண்டும், பயன்மிக்க மேய்ப்பர்கள், போதகர்கள், சுவிசேஷகர்கள் மற்றும் மிஷினரிகள் எழும்புவதே நம் பயிற்சியின் நிறைவான பலனாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறோம்.

தங்கள் வகுப்புகள் பயனுள்ளதாக இருக்கிறதா என்று அறிய ஆசிரியர்கள் குறிப்பிடத்தக்க உடனடி பலன்கள் கிடைக்கிறதா என்று பார்க்க வேண்டும். தங்கள் மாணவர்கள் நன்றாக ஊழியம் செய்கிறார்களா என்று பார்க்கக் காத்திராமல், தங்கள் வகுப்புகள் பயனுள்ளதாக என்று பார்ப்பது அவசியம்.

வகுப்பினர் நன்றாக கவனிப்பதுதான் ஆசிரியருக்குக் கிடைக்கும் முதல் பலனாக இருக்கும். ஆசிரியர்கள் ஒழுங்கைக் கடைபிடித்தால் மாணவர்கள் கவனம் செலுத்துவார்கள். மாணவர்கள் கவனம் செலுத்தாததற்கு அவர்களை மட்டுமே குற்றம் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. ஆசிரியர்கள் வகுப்பை சுவாரசியமாகக் கொண்டு செல்ல வேண்டும்.

வகுப்பு வெற்றிகரமாக நடப்பதற்கான மற்ற அடையாளங்களும் உண்டு. மாணவர்களின் பங்கேற்பும், தவறாமல் வருவதும், பயிற்சி வேலைகளை நிறைவு செய்வதும், மாணவர்கள் தாங்கள் கற்றுக்கொள்வதைக் குறித்து உற்சாகமடைவதும் அதில் அடங்கும். இந்த அறிகுறிகளை ஆசிரியரால் பார்க்க முடியவில்லை என்றால், அவர்கள் தாங்கள் வகுப்புகளை நடத்தும் பாணியை சரிசெய்து கொள்ள வேண்டியது அவசியம்.

## நல்ல போதனைக்கான மேலும் சில வழிநடத்தல்கள்



1. **நேரத்தை மதியுங்கள்**. கூடுகைகளை சரியான நேரத்தில் ஆரம்பித்து சரியான நேரத்தில் முடிக்க வேண்டும். எல்லோரும் வரும் வரைக் காத்திருக்க வேண்டியதில்லை. தாமதமாக ஆரம்பித்தால், சரியான நேரத்தில் வந்தவர்களுடைய நேரத்தை வீணாக்குவதாக்கி விடும். தாமதமாக முடித்தால், மாணவர்களுடைய மற்ற கடமைகள் பாதிக்கப்படலாம். சில கலாச்சாரங்களில், நேரத்தைக் கவனமாகக் கைக்கொள்வது அத்தனை சுலபமாக இருப்பதில்லை. ஆனால் அதிலிருக்கும் மக்களுக்கு வேலை அல்லது பயணத்திற்கு எப்படி நேரந்தவறாமல் செல்ல வேண்டும் என்பது மட்டும் தெரியும். அதே முக்கியத்துவத்தை இந்த வகுப்புகளுக்கும் கொடுக்க வேண்டும்.

2. **அரை வட்ட வடிவில் மாணவர்களை அமரச் செய்யுங்கள்**. கலந்துரையாடல் முக்கியமானதாக இருப்பதால், மாணவர்கள் ஒருவரை ஒருவர் பார்க்கும் விதத்தில் உட்காருவது நல்லது.

3. **மாணவர்கள் பேசுவதைக் காதுகொடுத்துக் கேளுங்கள்**. கண்களைப் பார்ப்பதும், நல்ல முகபாவனையும், கவனச்சிதறல்களைத் தவிர்ப்பதும், பேசுகிறவரின்

நகைச்சுவை அல்லது மற்ற உணர்வுகளை ஆமோதிப்பதும் நன்கு கவனிப்பதன் அடையாளங்கள் ஆகும்.

4. **எந்த மாணவனும் எல்லா நேரங்களிலும் அமைதியாக இருக்க விடக்கூடாது**. அதிகம் பேசாத மாணவனிடம் குறிப்பாகக் கேள்வி கேளுங்கள் ("சார்ல்ஸ், இதைப் பற்றி என்ன நினைக்கிறாய்?").

5. **மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கும் பதில்களைக் கொடுக்கக் கூடிய கேள்விகளைக் கேளுங்கள்**. யாராவது தவறாக பதில் சொல்லவிட்டால், அந்தப் பதிலைப் பற்றி சற்று உற்சாகமாகப் பேசிவிட்டு பின்னர் அந்தத் தவறை உணர்த்துங்கள்.

6. **மாணவர்களின் எல்லா குறிப்புகளையும் விமர்சிப்பதற்கு முன் பாராட்ட வழி தேடுங்கள்**. தாங்கள் பங்கேற்பது பாராட்டப்பட்டால் மாணவர்களுக்குத் தன்னம்பிக்கை வரும்.

7. **ஒரே மாணவனே அதிகம் பேசி, எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்ல விடாதீர்கள்**. குறிப்பிட்ட மாணவர்களிடம் கேள்வி கேட்கலாம். அல்லது "மற்றவர்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்கலாம். கலந்துரையாடலில், "இதைப் பற்றி இன்னும் பேசாத ஒருவர் பேசட்டும்" என்று சொல்லலாம்.

   தனிநபர்கள் தொடர்ந்து பேசிக் கொண்டே இருக்கும்போது, தலைவர் அப்போதைக்கு அவர்களை நிறுத்தச் சொல்லி வகுப்பு முடிந்ததும் தொடரலாம். தலைவர் இப்படியாகச் சொல்ல வேண்டும்: "சார்ல்ஸ், நீங்கள் வேகமாக யோசிப்பவர், அதனால் கலந்துரையாடல்களில் உங்களால் வேகமாக பதில் சொல்ல முடிகிறது. நாமே எல்லாவற்றிற்கும் உடனடியாக பதில் சொல்லிவிட்டால், மற்றவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்காமல் போய்விடுமோ என்று தோன்றுகிறது. எல்லோரையும் இதில் ஈடுபடுத்த எனக்கு உதவி செய்வீர்களா?"

8. **குழுவினரைப் புறக்கணித்து இரண்டு மூன்று மாணவர்கள் மற்றும் தொடர்ந்து விவாதிக்க அனுமதிக்காதீர்கள்**. யாரேனும் ஒருவர் ஒன்றைப் பற்றி தொடர்ந்து நீண்ட நேரமாக விவாதிக்க நினைத்தால், அந்தக் கலந்துரையாடலைப் பின்னர் தொடரலாம் என்று சொல்லிவிடுங்கள்.

9. **ஒருவர் பேசும்போது இன்னொருவர் குறுக்கிட்டுப் பேச அனுமதிக்காதீர்கள்**. உங்கள் கையை உயர்த்தி, குறுக்கிடுபவரை நிறுத்தச் சொல்லி, முதலில் பேசிக் கொண்டிருப்பவர் முடிக்க அனுமதியுங்கள். இல்லையென்றால், குறுக்கிடுபவர்களே எப்போதும் கலந்துரையாடலில் ஆதிக்கம் செலுத்துவார்கள். நிச்சயமற்றவர்களாக இருப்பவர்கள் தங்களால் பேசி முடிக்க முடியவில்லையே என்று குழப்பமடைவார்கள்.

10. **குறைசொல்வதைக் கவனியுங்கள்**. குறை சொல்லும்போது சரிசெய்து கொள்ள வேண்டிய பிரச்சனைகள் வெளிப்படலாம். திருப்தியின்மை வெளிப்படும்போது அதைப் புறக்கணித்து விடாதீர்கள். வகுப்பில் ஒரு திருப்தியின்றி இருந்தால், அவர் பயிற்சியின் நோக்கத்தை அறியாமல் போய்விட வாய்ப்புண்டு அல்லது அவர் சரியான ஒரு குறையைச் சுட்டிக் காண்பிக்கலாம்.

11. **இடையூறு செய்யும் மாணவரை சரிசெய்யுங்கள்**. மாணவர்கள் தனிப்பட்ட விதத்தில் தொடர்ந்து இடையூறு அல்லது விவாதம் செய்கிறவர் அல்லது சலித்துக் கொள்கிறவர் வகுப்பின் நோக்கத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். வகுப்பு அவர்கள் எதிர்பார்த்த விதத்தில் நடக்காமலும் இருக்கலாம். அவர்களிடம் தனிப்பட்ட விதத்தில் பேசி, வகுப்பின் நோக்கத்தை அறிந்து கொள்ளச் செய்யலாம்.

12. **பதில் தெரியாதபோது தெரிந்தது போல நடிக்காதீர்கள்**. ஆசிரியருக்கு எல்லாம் தெரிந்திருக்க வேண்டுமென்று இல்லை. தெரியாத பதிலைத் தேடித் பார்த்துச் சொல்வதாக மாணவர்களிடம் சொல்வது பரவாயில்லை.

13. **கலந்துரையாடல் நாசமாகாதபடிப் பார்த்துக்கொள்ளுங்கள்**. குழுவினர் உள்ளூர் சபையையும், தலைவர்களையும் விமர்சிக்கும் இடமாக கலந்துரையாடல் மாறக்கூடாது. அதனால்தான் தங்கள் சபையிலுள்ளவர்கள் ஏதேனும் பயிற்சி வகுப்புக்குப் போவதைக் குறித்து போதகர்கள் கவலைப்படுகிறார்கள்.

14. **உங்கள் மாணவர்களை அறிந்து கொள்ளுங்கள்**. மாணவர்களின் குடும்ப சூழ்நிலை, ஊழிய அனுபவம், கல்விப் பின்னணி, தற்போதைய ஊழியப் பொறுப்பு மற்றும் எதிர்கால இலக்கு போன்றவற்றை அறிந்துகொண்டால் இன்னும் பயனுள்ள விதத்தில் அவர்களுக்கு கற்றுக் கொடுக்கலாம். தனிப்பட்ட உரையாடல்களில் இவற்றை அறிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்.

நல்ல போதனை மற்றும் முதிர்-பருவ மாணவர்களின் குணநலன்கள் பற்றிய மேலும் பல விபரங்களை 6-ம் அத்தியாயத்தில் காணலாம்.

## அத்தியாயம் 6

# SGC பாடத்தொடர்களை கற்றுக்கொடுத்தல்

## வகுப்பறை

கூடுமானால் ஆசிரியர் முன்கூட்டியே வகுப்பறையை ஆயத்தம் செய்வது நல்லது. மாணவர்கள் ஒருவரை ஒருவர் பார்க்கும் விதத்தில் உட்கார வைக்கப்பட வேண்டும். வகுப்பு நடக்கும்போது கவனத்தைச் சிதறடிக்கும் செயல்கள் அல்லது சத்தங்கள் வராத இடத்தில் வகுப்பறை இருக்குமாறு பார்த்துக்கொள்வது ஆசிரியரின் பொறுப்பு. வகுப்பறையில் இருக்கைகள் வசதியாகவும், நல்ல தட்பவெப்ப நிலையும், நல்ல வெளிச்சமும் இருக்க வேண்டும். அதிக கவனச்சிதறல் ஏற்படுத்தும் காரியங்கள் இல்லாத திறந்தவெளி படிக்கும் இடம் இருந்தால் நல்லது.

எழுதுவதற்கும், வரைவதற்கும் உதவியாக வகுப்பறையில் ஒரு பெரிய கரும்பலகை/வெள்ளைப் பலகை இருக்க வேண்டும்.

## முதல் நாள் வகுப்பு

ஆசிரியர்கள் தங்கள் குடும்பங்கள், ஊழிய அனுபவங்கள், தற்போதைய ஊழியங்கள் மற்றும் கல்விப் பின்னணிகளைப் பற்றி அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். தங்கள் உயர்வைக் காண்பிக்கும் விதத்தில் தங்கள் சாதனைகளை அடுக்கிக்கொண்டே போகக்கூடாது. இந்த தகவலை மாணவர்களுடன் பகிர்ந்து கொள்வது அவர்களுடன் தொடர்பு ஏற்படுத்தவே என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

மாணவர்கள் சுருக்கமாகத் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆசிரியர் ஒவ்வொரு மாணவரிடமும் பேசுவதற்காக ஓரிரு கேள்விகளைக் கேட்டு அவர்கள் மீது தங்களுக்கிருக்கும் ஆர்வத்தை வெளிப்படுத்தி, தொடர்பு ஏற்படுத்தலாம்.

அறிமுகத்திற்குப் பின் ஜெபம் செய்யலாம். மாணவர்களின் தேவைகளைச் சந்திக்க தேவன் அந்த வகுப்பைப் பயன்படுத்த வேண்டுமென்று ஜெபியுங்கள். கற்றுக்கொடுக்கும் காரியங்கள் வாழ்க்கை மாற்றுவதாகவும், பயனுள்ளதாகவும் இருக்க தேவனைச் சார்ந்திருக்க வேண்டும் என்பதை ஆசிரியர் மாணவர்களுக்குக் காண்பிக்க வேண்டும். அடுத்து வரும் வகுப்புகளையும் ஜெபத்துடன் தொடங்கி, ஜெபத் தேவைகளைப் பகிர்ந்து கொள்ள சற்று நேரம் கொடுக்கவும் செய்யலாம்.

மாணவர்கள் வேதாகமம், பாட மற்றும் எழுதும் புத்தகங்கள் போன்ற எந்தெந்த உபகரணங்களைக் கொண்டுவர வேண்டும் என்பதை ஆசிரியர் சொல்லிவிட வேண்டும். தேர்வுகளுக்காக அல்ல, எதிர்கால நன்மைக்காக மாணவர்கள் குறிப்பு எடுப்பதை ஆசிரியர்கள் வலியுறுத்த வேண்டும். (தேர்வுக்கான அனைத்தும் பாட புத்தகத்திலேயே உள்ளன.)

அறிமுகப்பகுதிக்குப் பின்னர், முதல் வகுப்பு அடுத்து வரும் வகுப்புகள் எப்படி இருக்கும் என்பதைக் காண்பிப்பதாக இருக்கும். அதனால் எதை எதிர்பார்த்து வர வேண்டும் என்பது மாணவர்களுக்குத் தெரிந்து விடும்.

## பாட அமைப்பு

SGC பாடத்தொடர்கள் வெறும் புத்தகங்கள் மட்டுமல்ல; அவை கற்றுக்கொடுக்கும்படி அமைக்கப்பட்ட பாடத்தொடர்கள். ஒவ்வொரு பாடத்தொடரின் துவக்கத்திலும் ஆசிரியருக்கான வழிகாட்டல்கள் உண்டு. பாடத்தொடர்கள் அனைத்தும் ஒரே மாதிரியாக இருந்தாலும், அமைப்பில் மாறுபட்டிருக்கின்றன.



சில பாடத்தொடர்களில் உள்ள பாடங்களின் ஆரம்பத்தில் பாட நோக்கங்கள் இருக்கும். அவற்றை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வாசித்து காட்ட வேண்டிய அவசியமில்லை.

அநேக பாடங்கள் ஒரு கேள்வி அல்லது கதை அல்லது ஆர்வத்தைத் தூண்டும் சில நுட்பங்களுடன் தொடங்கும். அதன் மூலம் அந்தத் தலைப்பு முக்கியமானது என்பதை மாணவர்கள் அறிந்து கொள்வார்கள்.

ஆசிரியர்கள் பாடத்தை ஒவ்வொரு பக்கமாக, ஒவ்வொரு பத்தியாக நடத்த வேண்டும். முன்னதாகவே எல்லாவற்றையும் படித்து புரிந்து ஆயத்தமாக வேண்டும். முக்கிய வாக்கியங்களை அடிக்கோடிட்டுக் கொண்டால் ஒவ்வொரு பத்தியாக விளக்க உதவியாக இருக்கும்.

பாடம் முழுவதும் கலந்தாலோசிக்கும் கேள்விகள் உண்டு. சிலசமயங்களில் கேள்விகள் அதற்குப் பின்னாக வரும் பாடப்பகுதியை அறிமுகப்படுத்துவதாக இருக்கும். மற்றும் சில இடங்களில், மாணவர்கள் படித்து முடித்த பாடங்களிலிருந்து கேள்விகள் கொடுக்கப்பட்டிருக்கும். கேள்விகளுக்கு "ஆம்" அல்லது "இல்லை" என்ற பதில் கொடுக்கும்படி இருக்காது, பதில்களை விளக்க வேண்டியதாக இருக்கும். பல மாணவர்கள் ஒரே நேரத்தில் பதில் சொல்ல விடக்கூடாது. ஒவ்வொரு முறையும், கலந்தாலோசனை தீர்வுடன் முடிய வேண்டும் என்றில்லை. குறிப்பாக ஒரு கேள்வி அடுத்து வரும் பாடத்தை அறிமுகப்படுத்துவதாக இருக்கும்போது அது அவசியமில்லை.

ஆசிரியர்கள் சொந்தமாக கூடுதல் கேள்விகளை கலந்தாலோசிக்கக் கொடுக்கலாம். மாணவர்களுடன் கலந்தாலோசிக்காமல் ஆசிரியர்கள் வெகுநேரமாக தாங்களே பேசிக் கொண்டிருப்பதாக உணரும் நேரங்களில், மாணவர்களிடம் கேள்வி கேட்கலாம்.

கலந்துரையாடல்களில் நேரம் வீணாகாமல் பார்த்துக் கொள்வது எப்போதுமே ஒரு சவால்தான். இருப்பினும், கலந்துரையாடல் இல்லாமல் பலரால் நன்றாகக் கற்றுக்கொள்ள முடியாது. மற்றவர்கள் தங்கள் கலாச்சாரத்திற்கும், சபை சூழ்நிலைகளுக்கும் எப்படி சில கருத்துக்கள் பொருந்துகின்றன என்பதைப் பற்றிச் சொல்வதைக் கேட்க மாணவர்களுக்கு நேரம் கொடுக்க வேண்டும்.

பெரும்பாலான பாடங்களின் முடிவில் பயிற்சி வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கும். ஆசிரியர் அந்த பயிற்சி வேலையை விளக்க வேண்டும். ஒரே வகுப்பில் பல பாடங்களை நடத்தினால், அடுத்த வகுப்பில் சமர்ப்பிக்க வேண்டிய எல்லா பயிற்சி வேலைகளையும் மாணவர்கள் புரிந்து கொண்டார்களா என்பதை ஆசிரியர் உறுதி செய்ய வேண்டும்.

## அடுத்து வரும் வகுப்புகள்

முதல் நாள் வகுப்பிற்குப் பின் ஒவ்வொரு வகுப்பிலும் பயிற்சி வேலைகளை சமர்ப்பிக்க வேண்டியிருக்கும். வகுப்பு ஆரம்பித்தவுடனே ஆசிரியர் மாணவர்களிடமிருந்து பயிற்சி வேலைகளை சேகரிக்க வேண்டும். ஒருசில மாணவர்கள் வகுப்பின் ஆரம்பத்திலும், மற்றவர்கள் வகுப்பு நடக்கும்போது அவ்வப்போதும் தங்களுடைய பயிற்சி வேலையை அனைவரின் முன் சமர்பிக்க வேண்டும். அப்போது வகுப்பில் பலதிறப்பட்ட வேலைகளைச் செய்வது போல சலிப்பில்லாமல் இருக்கும்.

தேர்வு அல்லது மனனம் செய்து எழுத வேண்டிய ஒன்று இருக்குமானால், மாணவர்களை மற்றவர்கள் எழுதுவதைப் பார்க்க முடியாதபடி இடைவெளி விட்டு உட்கார வைக்க வேண்டும்.

ஆசிரியர் மாணவர்களிடம் கொடுக்கப்பட்ட பயிற்சி வேலைகளை விளக்கும்படி அவர்களிடம் கேட்பதைத் தவிர அடிக்கடி பாடத்தின் பகுதிகளை விளக்கும்படிக் கேட்க வேண்டும். மாணவர்கள் இதற்கு ஆயத்தமாகும்படி முன்னதாகவே அவர்களுக்கு இதைத் தெரிவிக்க வேண்டும்.

### அத்தியாயம் 7

# ஆசிரியர்களைக் கண்டறிதல்

## இந்த அத்தியாயத்தை மூன்று விதங்களில் பயன்படுத்தலாம்

1. **இந்த அத்தியாயத்தில் கொடுக்கப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி பயிற்சியாளர் ஒருவர் உள்ளூர் ஆசிரியர்களை உருவாக்கலாம்**. உள்ளூர் சபையில் கற்றுக்கொடுக்கத் தக்க ஒருவர் இருப்பதாக உணர்ந்தால், தனிப்பட்ட விதத்தில் செயல்படும் ஒரு உள்ளூர்த் திட்டத்தை பயிற்சியாளர் உடனடியாகத் தொடங்க முடியாது. முதலில் அவர் ஆசிரியராகும் திறமை கொண்டவர்களைக் கண்டறிந்து உருவாக்க வேண்டும். உள்ளூர் ஆசிரியர்களை எப்படி தொடங்க வைப்பது என்பதைப் பற்றி இந்த அத்தியாயம் பயிற்சியாளர்களுக்கு விளக்குகிறது.

2. **உள்ளூர் ஆசிரியர்கள் இந்த முறைகளைத் தங்கள் மாணவர்களிடம் பயன்படுத்தும்படி பயிற்சியாளர் அவர்களைப் பயிற்றுவிக்கிறார்**. புதிய இடத்தின் உள்ளூர் ஆசிரியர்கள் ஏற்கனவே கற்பிக்கும் திறமை கொண்டவர்களாக இருந்தால், பயிற்சியாளர் இந்த அத்தியாயத்தில் இருக்கும் பயிற்சிகளைப் பயன்படுத்தத் தேவையில்லை. உள்ளூர் ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களை உருவாக்க இந்தப் பயிற்சிகளைப் பயன்படுத்தும் விதத்தில் பயிற்சியாளர் இந்த முறைகளை அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

3. **உள்ளூர் ஆசிரியர் மாணவர்களை உருவாக்குகிறார்**. ஒவ்வொரு ஆசிரியரும் மாணவர்களின் ஊழியத் திறமைகளை வளர்க்க முயற்சி செய்ய வேண்டும். இந்த அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டுள்ள முறைகள் மாணவர்கள் மற்ற குழுக்களில் பேசத் தொடங்குவதற்கு உதவும்.

## ஆசிரியர்களைக் கண்டறிய வேண்டியதன் அவசியம்

சிலசமயங்களில் SGC பிரதிநிதிகள் சபைகளுக்குப் போகும்போது, அங்கு உடனடியாக பாடங்களைக் கற்பிக்கக் கூடியவர்கள் இருப்பார்கள். வழக்கமாக, ஆசிரியராகும் திறமை கொண்ட இவர்கள் சில கல்விப் பயிற்சிகளையும், ஆசிரியர் அனுபவத்தையும் கொண்டிருப்பார்கள். அவர்கள் பாடங்களைப் பார்க்கும்போது அவை கற்பிக்க எளிதாக இருப்பதை அறிவார்கள். ஒவ்வொரு பாடத்தொடரின் ஆரம்பத்திலும் சில வழிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. கலந்துரையாடல் கேள்விகளும் உள்ளன. பாடத்தொடர்கள் சில

பாடங்களைக் கொண்ட புத்தகங்கள் மட்டும் அல்ல; பார்த்தவுடனேயே கற்பிக்கும் விதத்தில் எல்லாக் குறிப்புகளையும் கொண்டுள்ளன.

வாசிக்கும் திறமையும், வேத அறிவும், கற்பிக்கும் திறமையும் கொண்டவர்கள் துரிதமாகப் பயன்படுத்தக் கற்றுக்கொள்ளும் விதத்தில் பாடத்தொடர்கள் அமைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், தேவையான கல்விப் பயிற்சி அற்றவர்கள் தங்களால் கற்பிக்க முடியாது என்று நினைப்பார்கள். அதிக பயிற்சி பெற்றவர்கள் மட்டுமே இவற்றைக் கற்பிக்க முடியும் என்று நினைப்பதே அதற்குக் காரணம்.

பல்கலைக்கழகத்தில் படிக்கும் வாய்ப்பு கிடைக்காத அநேகருக்கு தேவன் கற்பிக்கும் திறமையைக் கொடுத்திருக்கிறார். சபைக்கு ஆசிரியர்கள் தேவை என்பதால், சபை இருக்கும் இடங்களில் எல்லாம் தேவன் இயல்பாகவே மக்களுக்கு கற்பிக்கும் திறமையைக் கொடுத்திருக்கிறார் என்பதை உறுதியாக நம்பலாம் (எபேசியர் 4:11-12).

அநேகர் தங்கள் இயல்பு வாழ்க்கையிலேயே கற்பிக்கும் திறமைகளை வளர்த்துக் கொண்டிருப்பதை அறிவதில்லை. ஆனால், அவர்கள் வீட்டிலும் வேலைஸ்தலத்திலும் அருமையாக எல்லாவற்றையும் விளக்குவார்கள். மற்றவர்களின் பிரச்சனைகளைத் தீர்க்கவும் உதவுவார்கள். எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்வதற்கு பேர்பெற்றவர்களாக இருப்பார்கள். அவர்கள் பள்ளியில் மாணவர்களாக இருந்தபோது, வாசித்தல், புரிந்து கொள்ளுதல் மற்றும் விளக்கிச் சொல்லுதலில் சிறந்து விளங்கியிருக்கக் கூடும். ஆனால், தங்களுக்கு கற்பிக்கும் திறமை உண்டு என்பது மட்டும் அவர்களுக்குத் தெரியாது.

இப்படிப்பட்ட ஆசிரியராகும் திறமை கொண்டவர்களை பேச வைத்து கவனித்து, அவர்கள் தங்கள் திறமைகளைக் கண்டுகொள்வதற்கு பயிற்சியாளர்கள் உதவ வேண்டும். அனுபவத்தின் மூலம் ஒருவர் நிறைய பேர் உள்ள குழுக்களுக்கு முன்பாகப் பேசும் தன்னம்பிக்கைப் பெறுவார்கள்.

## பேசும் அனுபவங்களை ஏற்படுத்தும் வழிகள்

1. **எளிய தலைப்புகளில் பேசுவதற்கான பயிற்சி வேலைகளைக் கொடுக்கவும்**. ஒருசில நிமிடங்கள் அந்தத் தலைப்பில் பேசச் சொல்லலாம். மாணவர்கள் குழுவினருக்கு முன்பாக நின்று பேச பதட்டமாக உணர்ந்தார்கள் என்றால், நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே முதலில் ஓரிரு முறை பேசலாம்.

   பேச வைப்பதற்கான எளிய பயிற்சி வேலைகள்:

   - உங்கள் குழந்தைப் பருவத்தில் சவாலாக இருந்த ஒரு விஷயத்தைப் பற்றிச் சொல்லவும்.
   - நீங்கள் மிக முக்கியமானவராகக் கருதிய உங்கள் உறவினரைப் பற்றிச் சொல்லவும்.

- இன்னொரு மாணவரிடம் சில கேள்விகளைக் கேட்டு, பின்னர் அவரைக் குழுவுக்கு அறிமுகப்படுத்தவும்.
- எந்த இடத்திற்குச் செல்ல விரும்புகிறீர்கள்? ஏன்?
- உங்களுக்கு மிகவும் பிடித்த வேதவசனத்தைப் பற்றிச் சொல்லுங்கள்.
- உங்கள் வேலைஸ்தலத்தில் ஒருநாள் நடந்ததைப் பற்றிச் சொல்லவும்.
- சமீபத்தில் நீங்கள் கேட்ட பிரசங்கத்திலிருந்து உங்கள் நினைவில் நிற்பது எது?

2. **வகுப்பில் உள்ள ஒருவரிடம் நேரடியாகக் கேள்வி கேட்கவும்**. அந்தக் கேள்விக்கு சற்று விளக்கம் அளிக்க வேண்டும், ஒரு வார்த்தையில் பதில் சொல்லும்படி இருக்கக் கூடாது. பதில் சொல்லக்கூடிய கேள்வியாக இருக்க வேண்டும், அப்போதுதான் மாணவர்கள் தர்மசங்கடமாக உணராமல், தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ள முடியும்.

3. **மாணவர்கள் தங்கள் எழுதிய பயிற்சி வேலையை குழுவுக்கு விளக்கிக் காண்பிக்கச் சொல்லவும்**. இந்தப் பயிற்சியில் எழுதுவதற்கு பல பயிற்சி வேலைகள் கொடுக்கப்படும். பயிற்சியாளர் ஒரேயொரு நாள் மட்டும் இருந்தாலும், மாணவர்கள் ஒரு பயிற்சி வேலையையாவது எழுதி அதை விளக்கும்படி சொல்ல வேண்டும்.

4. **கற்பிக்கும் பயிற்சிக்காக மாணவர்களை மூன்று பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கவும்**. ஒவ்வொருவரும் ஒரு சிறு பகுதியை குழுவினருக்குக் கற்பிக்க வேண்டும். இதில் பார்வையாளர்கள் குறைவாக இருப்பதால், பல மாணவர்கள் ஒரே நேரத்தில் பயிற்சி செய்ய உதவியாக இருக்கும்.

5. **பாடத்தின் ஒரு பகுதியை மாணவர் ஒருவர் விளக்கும்படிக் கேட்கவும்**. இந்தப் பாடத்தொடரில் ஒரு கருத்தை விளக்க வெகுசில பத்திகள் கொடுத்திருப்பார்கள். அதில் ஒரு பத்தியை ஒருசில நிமிடங்களில் விளக்குவதற்கு ஆயத்தமாகும்படி மாணவர்களிடம் முன்கூட்டியே சொல்லவும்.

6. **திறமை பெற்ற மாணவரிடம் பாடத்தொடரின் ஒரு பாடத்தை கற்பிக்கும்படிக் கேட்கவும்**. வேறு ஒருவர் கற்பித்த பாடத்தை மீண்டும் கற்பிக்கும்படி மாணவரிடம் கேட்பது இதை எளிதாகச் செய்யும் முறையாகும். அதேசமயம், யாரும் தனக்குக் கற்பிக்காத பாடத்தை தானே ஆயத்தம் செய்து கற்பிக்கும்போது, அந்த மாணவர் தனக்கு அதிகத் திறமை இருப்பதை வெளிப்படுத்துகிறார். பயிற்சியாளர் தானே முடிந்தவரை எல்லாவற்றையும் கற்றுக்கொடுக்க வேண்டுமென்றும், மாணவர்கள் தான் சொல்வதைக் கேட்டால் போதும் என்று நினைப்பது இயல்பு. ஆனால், மற்றவர்களைக் கற்பிக்கக் கூடியவர்களாக ஆயத்தப்படுத்த வேண்டும் என்பதே இங்குள்ள இலக்கு.

7. **"மேஜைப் பேச்சு" முறையைப் பயன்படுத்தவும்**. மாணவர்கள் ஒரு மேஜையைச் சுற்றி உட்கார்ந்து கொள்ள வேண்டும். அவர்கள் கையில் பாட புத்தகம் இருக்க வேண்டும். ஆசிரியர் யாரும் அந்த மேஜையின் அருகில் இருக்கக் கூடாது. ஒவ்வொரு மாணவரும் பாடத்திலிருந்து ஏதேனும் ஒன்றைப் பற்றிப் பேச வேண்டும். மேஜையில் இருப்பவர்களில் ஒருவர் தலைவராக இருந்து, மற்றவர்களிடம் பேசச் சொல்லி, கலந்துரையாடலை நடத்த வேண்டும். அந்தத் தலைவர் ஆசிரியராக இருக்கக் கூடாது. ஆசிரியர் இல்லாமலே கலந்துரையாடல் மூலம் தாங்களாகவே செயல்பட்டுக் கற்றுக்கொள்ள முடியும் என்பதை குழுவினர் கண்டுகொள்வார்கள். ஆசிரியராகும் தகுதி பெற்றவர்கள் இல்லாத இடங்களில் பாடக் குழுக்களை உருவாக்க இம்முறை உதவியாக இருக்கும்.

## முடிவுரை

ஊழியப் பயிற்சியை உள்ளூர்களிலேயே நடத்த வேண்டும் என்பதே SGC-யின் தரிசனம். தேவனுடைய வரத்தையும், வேத அறிவையும் கொண்டவர்கள் எங்கிருந்தாலும் அவர்கள் மூலம் பயிற்சிகளை நடத்தலாம். தங்கள் நோக்கம் அறிவைப் பகிர்ந்து கொள்வது மட்டுமல்ல, மாணவர்களை மற்றவர்களுக்கு சத்தியத்தைப் பகிர்ந்து கொள்பவர்களாக ஆயத்தம் செய்வதும் தங்கள் நோக்கம் என்பதை ஆசிரியர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

## அத்தியாயம் 8

# உள்ளூர் மேய்ப்பர் நிறுவனத்தை இயக்குதல்

## அறிமுகம்

SGC பாடத்தொடர்கள் பலதிறப்பட்ட பயிற்சித் திட்டங்களில் பயன்படுத்தப்படுகின்றன. சில உயர்நிலைப் பள்ளிகளிலும் (மேல்நிலைப் பள்ளிகள் என்றும் சொல்லப்படுகின்றன) குறிப்பிட்ட சில பாடங்கள் பயன்படுத்தப்படுகின்றன. சில சபைகள் தங்கள் ஞாயிறு பள்ளி மாணவர்களுக்கு இந்தப் பாடத்தொடர்களைப் பயன்படுத்துகிறார்கள். வீட்டு வேதபாட குழுக்களும் இதனைப் பயன்படுத்துகின்றன. போதகர்கள் இந்தப் பாடத்தொடர்களிலிருந்து சில தலைப்புகளை எடுத்து பிரசங்கிக்கவும், போதிக்கவும் உபயோகிக்கிறார்கள்.

இந்த அத்தியாயம் ஒரு முழுமையான பயிற்சிக்கு SGC-யின் 20 பாடத்தொடர்களையும் பயன்படுத்தும் உள்ளூர் நிறுவனத்தை இயக்குவதற்கான வழிமுறைகளைக் கொண்டுள்ளது.

## கல்வி நிலை



SGC-யின் முழு பாடத்தொகுப்பு வேதாகமக் கல்லூரிகளின் மிக முக்கியமான பாடத்திட்டத்தைக் கொண்டுள்ளது. ஆனால் எல்லோரும் படிக்க உதவியாக எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது.

பாடத்தொடர்களைப் படிக்கும் மாணவர்களுக்கு எழுதவும் படிக்கவும் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். அவ்விதமாகத்தான் இந்தப் படத்தொடர் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடத்தொடர் புதிதாக இரட்சிக்கப்பட்டவர்களை சீஷர்களாக உருவாக்குவதற்காக அமைக்கப்பட்டதல்ல என்றாலும் இதன் பெரும்பகுதி அதற்கும் உதவும்.

குழுவினர் கைக்கொள்ள வேண்டியவை: ஒவ்வொரு மாணவரும்

1. ஒரு பாடப்புத்தகம் வைத்திருக்க வேண்டும்.

2. பயிற்சி வேலைகளை நிறைவு செய்ய வேண்டும்.
3. குழுவினருக்கு படங்களைக் கற்பித்து பயிற்சி செய்ய அனுமதிக்கப்பட வேண்டும்
4. ஒரு உள்ளூர் சபையுடன் நல்லுறவு கொண்டு,
5. குழுவைத் தவிர வெளியிடங்களில் முறையாக ஊழியம் செய்ய வேண்டும்.

இந்தப் பழக்கங்களைக் கொண்ட ஆசிரியரால் மாணவர்களைப் பயனுள்ள விதத்தில் ஊழியத்திற்குப் பயிற்றுவிக்க முடியும்.

ஊழியத்திற்கு ஆயத்தமாகாத மாணவர்களுக்கென்று மாணவர் பதிப்பு புத்தகங்கள் உள்ளன. இந்த மாணவர் பதிப்பு புத்தகங்கள் பாடத்தொடர்களின் சுருங்கிய வடிவம் ஆகும். அவை உயர்நிலைப் (மேல்நிலை) பள்ளிகளிலும், ஞாயிறு பள்ளிகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த மாணவர்கள் ஊழியம் செய்வதோ அல்லது ஊழியத்திற்கு ஆயத்தம் செய்வதோ இல்லை என்பதால் வழக்கமான பயிற்சி வேலைகளைச் செய்ய வேண்டியதில்லை. மாணவர் பதிப்பு புத்தகங்களை ஊழியத்திற்கு ஆயத்தம் செய்கிற மற்றும் ஊழியப் பயிற்சி சான்றிதழ் பெற விரும்புகிற மாணவர்கள் பயன்படுத்தக் கூடாது. மாணவர் பதிப்பு புத்தகங்கள் முழுமையாக இருக்காது என்பதால் இந்த மாணவர்களின் ஆசிரியர்கள் SGC-யின் முழுமையான பாடத்தொடர் புத்தகங்களிலிருந்து கற்பிக்க வேண்டும்.

SGC எந்தப் பட்டமும் கொடுப்பதில்லை. சில இடங்களில், SGC பாடத்திட்டத்தைப் பயன்படுத்தும் உள்ளூர் அல்லது தேசிய நிறுவனங்கள் தங்கள் தேவைக்கேற்ப பட்டம் அல்லது சான்றிதழ்களை வழங்குகின்றன. இந்தப் பட்டங்களைப் பெற மாணவர்கள் அந்த நிறுவனங்களில் பதிவு செய்து அதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

கல்விமுறைப்பட்டங்கள் கொடுக்காத இடங்களில் இந்தப் பயிற்சியை தொழில்முறை பயிற்சியாகக் கருத வேண்டும். வர்த்தக உலகில் கொடுக்கப்படும் தொழில்முறை பயிற்சிகள் ஒருவரை திறமையுடன் வேலை செய்ய ஆயத்தப்படுத்துகின்றன. அந்தப் பயிற்சித் திட்டங்களில் எந்தப் பட்டமும் கொடுப்பதில்லை என்றாலும், ஒருவர் நல்ல பயிற்சி பெற்றிருக்கிறார் என்பதற்கான சான்றிதழ்களைக் கொடுக்கிறார்கள். அதுபோல, SGC பயிற்சியும் ஊழியத்திற்கான தொழில்முறை பயிற்சியாக இருக்கிறது.

## தேவையான உபகரணங்கள்

பாட புத்தகங்கள் தவிர வேதாகமம் மட்டும் போதும், ஆனால் பாட புத்தகங்களில் மேற்கொண்டு படிக்க சில புத்தகங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. உள்ளூர் நிறுவனங்களில் மாணவர்களின் பயன்பாட்டிற்காக ஒரு நூலகத்தை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும்.

## வகுப்பகளின் கால அட்டவணை

உள்ளூர் நிறுவனங்கள் உள்ளூர் சூழ்நிலைகளுக்கு ஏற்ப சொந்தமாக வகுப்புகளுக்கான கால அட்டவணையைத் தயாரிக்கலாம். கலந்துரையாடல் இல்லாமலும், மாணவர்கள் பயிற்சி செய்யாமலும் ஆசிரியர் மட்டும் பாடங்களைக் கற்பித்துக் கொண்டே இருந்தால்

குறைவான நேரம் மட்டுமே தேவைப்படும், ஆனால் இம்முறையில் மாணவர்களை நன்றாக ஆயத்தமாக்க முடியாது. பாடங்களையும், பயிற்சி வேலைகளையும் பற்றிக் கலந்துரையாட குழுவினருக்கு நேரம் கொடுக்கும் பட்சத்தில் பாடத்தொடர்களை நிறைவு செய்ய வகுப்பு நேரம் முப்பது மணிநேரத்திற்கும் மேல் தேவைப்படும். ஆகவே, மாணவர்கள் வகுப்பு நேரம் முடிந்து கூடுதல் நேரமெடுத்து பயிற்சி வேலைகளைச் செய்யலாம்.

## வகுப்பு ஒழுங்குகள்

ஒரு குறிப்பிட்ட வரிசையில்தான் வகுப்பை நடத்த வேண்டும் என்றில்லை. ஒவ்வொரு வகுப்பும் தன்னில்தானே முழுமையாக இருக்க வேண்டும், அடுத்த வகுப்பைச் சார்ந்திருக்கக் கூடாது. புதிய மாணவர்கள் ஒரு பாடத்தொடரின் ஆரம்பத்தில் சேர அனுமதித்து, சுழற்சி முறையில் பயிற்சியை நடத்தலாம். நிறுவனங்கள் மாணவர்களை வருடத்தின் ஆரம்பம் வரைக் காத்திருக்கச் செய்யாமல், தொடர்ந்து மாணவர் சேர்க்கை நடத்தலாம். மாணவர்கள் எந்தவொரு பாடத்தொடரின் துவக்கத்திலும் பதிவு செய்து, அடுத்தடுத்த பாடத்தொடர்களைப் படித்து பயிற்சியை நிறைவு செய்யலாம்.

## தகுதி ஆய்வு

மாணவர்களின் வருகையை ஆசிரியர்கள் பதிவு செய்ய வேண்டும். குறைத்து 75% வகுப்புகளுக்கு வருகை தந்து, 100% கொடுக்கப்பட்ட வேலைகளை நிறைவு செய்யாத மாணவர்களுக்கு மதிப்பெண் கிடைக்காது. தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில், தவற விட்ட வகுப்புகளுக்கு ஈடு செய்ய ஆசிரியர்கள் மாணவர்கள் படிக்க கூடுதல் பாடங்களைக் கொடுக்கலாம்.

மாணவர்கள் செய்து முடித்த பயிற்சி வேலைகளை ஆசிரியர்கள் கவனமாகப் பதிவு செய்து வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் இறுதி மதிப்பெண் சரியாகவும், துல்லியமாகவும் கொடுக்க முடியும். வகுப்புகளுக்கு வராமலும், பயிற்சி வேலைகளை நிறைவு செய்யாமலும் இருப்பது தங்கள் மதிப்பெண்ணைக் குறையச் செய்யும் என்பதை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் தெரியப்படுத்த வேண்டும்.

உள்ளூர் நிறுவனம் பல நிறுவனங்களைக் கொண்ட ஒரு அமைப்பின் அங்கம் வகித்தால், மாணவர்களின் வருகை மற்றும் பயிற்சிவேலை பற்றிய பதிவுகள் வட்டார பயிற்சியாளர்கள் ஆய்வு செய்ய சமர்ப்பிக்க வேண்டும். ஒரு நிறுவனம் தேவையானவற்றை சீராக செய்யாத பட்சத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்படும் சான்றிதழ்களுக்கு மதிப்பு இருக்காது.

## உள்ளூர் நிதி உதவி

ஒவ்வொரு உள்ளூர் நிறுவனப் பகுதியும் உள்ளூரிலேயே உதவி பெற்றுக்கொள்ள வேண்டும். உள்ளூர் சபை ஒன்றில் வகுப்பறையை ஏற்பாடு செய்யலாம். ஆசிரியர்கள்

உள்ளூரில் ஊழியம் செய்பவர்களாக இருக்கலாம். புத்தகங்களை அச்சிடுவதற்கு ஆகும் செலவை உள்ளூர் ஊழியங்கள் அல்லது மாணவர்கள் பொறுப்பெடுத்துக் கொள்ளலாம். ஒரு நிறுவனம் பல நிறுவனங்களைக் கொண்ட ஒரு அமைப்பின் அங்கம் வகித்தால், நிர்வாக மையம் மாணவர்களுக்கு ஒரு கட்டணம் நியமித்து, அதை புத்தகங்களுக்கும், உள்ளூர் நிறுவன அலுவலர்களுக்கும் பயன்படுத்தலாம்.

எல்லாப் பொருளாதார விஷயங்களிலும் உள்ளூர் நிறுவன அலுவலர்கள் நேர்மையாகவும், வெளிப்படையாகவும் இருப்பது அவசியம் (2 கொரிந்தியர் 8:21). சம்பந்தப்பட்டவர்கள் அனைவருமே எவ்வளவு பணம் வருகிறது, அது எப்படி செலவிடப்படுகிறது எனபதை அறிந்திருக்க வேண்டும். பணத்தை நிர்வகிக்க ஒரு குழுவை அமைக்க வேண்டும். உள்ளூர் நிறுவனம் அல்லது நிர்வாக மையத்தில் மாணவர்கள் செலுத்தும் கட்டணம், அச்சிடப்பட்ட புத்தகங்களின் விலை, உள்ளூர் ஆசிரியர்களுக்குச் செய்யும் உதவி மற்றும் வேறு எந்த விதத்திலும் சேகரிக்கப்படும் அல்லது செலவிடப்படும் பணம் போன்றவை பொருளாதார விஷயங்களுக்கான உதாரணங்கள் ஆகும்.

நேர்மை என்பது கிறிஸ்தவ பண்பின் அடிப்படைக் கூறாக இருப்பதால், நேர்மையற்ற ஒருவர் நல்ல கிறிஸ்தவ முன்மாதிரியாக இருக்க முடியாது. நேர்மையற்றவர் எந்த ஊழியப் பொறுப்பிலும் இருக்கக் கூடாது. எந்தவொரு நேர்மை தவறும் சம்பவமும் SGC-யுடனான அந்தத் தலைவரின் உறவை பாதிக்கும்.

## ஒத்துழைக்கும் மிஷன் நிறுவனம்/தேசிய ஊழியமும், உள்ளூர் நிறுவனமும்

சபைகள் உள்ளூர் நிறுவனங்களை ஏற்படுத்த உதவும் தேசிய ஊழியத்தின் பெயர் ABC என்று வைத்துக்கொள்வோம். உள்ளூர் நிறுவனங்கள் ஏற்படுத்தும் இடங்களாக ABC பயன்படுத்தும் இடங்களுக்கான ஒப்பந்தம் அடுத்த பக்கத்தில் உள்ளது. ABC பிரதிநிதிகள் உள்ளூர் நிறுவனங்கள் இருக்கும் இடங்களைத் தொடர்ந்து முறையாக சந்தித்து, ஆய்வு செய்வார்கள். அதற்கு இந்த அத்தியாயத்தின் கடைசிப் பக்கத்தில் இருக்கும் கேள்விகளைப் பயன்படுத்துவார்கள்.

# மாதிரி இட ஒப்பந்தம்

*தங்கள் **தேசிய ஊழியத்திற்கும், உள்ளூர் நிறுவனத்திற்கும்** இடையேயான தொடர்பை விளக்க ABC இந்தப் படிவத்தைப் பயன்படுத்துகிறது.*

ஊழியத் தலைவர்களை உருவாக்கும்படி சபைகளை ஆயத்தப்படுத்தி கிறிஸ்துவின் சரீரத்தில் ஊழியம் செய்வதே ABC-யின் நோக்கமாகும். உள்ளூர் சபைகள் அல்லது ஊழிய நிறுவனங்கள் SGC பாடத்தொடர்களைப் பயன்படுத்தி ஊழியப் பயிற்சிகளை நடத்த அங்கீகாரம் பெற்றுக்கொள்ளலாம்.

உள்ளூர் ஊழியம் தான் செய்யும்படி ஒப்புக்கொண்டவற்றை நிறைவேற்றாதிருக்கும்போது இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்யும் உரிமை ABC-க்கு உண்டு.

## ABC வழங்குபவை:

- 20 ஊழியப் பயிற்சி பாடத்தொடர்களின் தொகுப்பு
- ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு
- உள்ளூர் ஆசிரியர்களை ஊக்குவித்து, தரத்தை மேம்படுத்த பயிற்சி நடக்கும் இடங்களில் நடக்கும் நிர்வாகச் சந்திப்புகள்
- ஒவ்வொரு பாடத்தொடரின் முடிவிலும் மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் சான்றிதழ்கள் (சான்றிதழ் பெற மாணவர்கள் சொந்தமாக பாடப்புத்தகம் வைத்திருக்க வேண்டும்)
- முழுப் பயிற்சியையும் நிறைவு செய்ததற்கான சான்றிதழ்
- ஊழியம் நடக்கும் இடத்தில் வைப்பதற்கான ABC அடையாள அட்டை

## உள்ளூர் ஊழியம் பின்வருவனவற்றை செய்ய ஒப்புக்கொள்ள வேண்டும்:

- ABC நிர்வாகத்தின் அங்கீகாரத்துடன் உண்மையும், தகுதியும் கொண்ட உள்ளூர் ஆசிரியர்களை நியமித்தல்
- ABC நிர்வாகத்தின் பயிற்சி மற்றும் வழிகாட்டல்களுக்கு ஆசிரியர்கள் ஒத்துழைத்தல்
- நன்றாகப் படிப்பதற்கு ஏற்ற சூழ்நிலையுடன் வகுப்பறை ஏற்பாடு செய்தல்
- தேவைப்படும்போது உள்ளூர் ஆசிரியர்களுக்கு நிதியுதவி செய்தல்
- தேவைப்படும் ஒவ்வொரு பாடப்புத்தகத்திற்கும் ஏற்ப பதிவுக் கட்டணத்தை சேகரித்து ABC-க்கு அனுப்பி வைத்தல்

- மாணவர்களின் வருகை மற்றும் நிறைவு செய்த பயிற்சிவேலைகள் பற்றிய அறிக்கைகளை ABC நிர்வாகத்திடம் கொடுத்தல்
- ABC கொடுத்திருக்கும் அடையாள அட்டையை பொருத்தி வைத்தல். அந்த அடையாள அட்டை ABC-க்குச் சொந்தமாக இருப்பதால், இந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டால் அதுவும் எடுத்துக்கொள்ளப்படும்.

உள்ளூர் ஊழியத்தின் பெயர் ______________________________

உள்ளூர் ஊழியப் பிரதிநிதியின் கையொப்பம் ______________________________

ABC-யின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியின் கையொப்பம் ______________________________

# உள்ளூர் நிறுவன ஆய்விற்கான மாதிரி கேள்விகள்

*ABC பிரதிநிதிகள் ஊழிய இடத்திற்குச் செல்லும்போது, பின்வரும் கேள்விகளைப் பயன்படுத்தி, மதிப்பீடு செய்து முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவார்கள்:*

1. அந்த இடத்திலுள்ள ஆசிரியர்கள் SGC ஆசிரியர் பயிற்சி பெற்றிருக்கிறார்களா?
2. ஆசிரியர்கள் பலதிறப்பட்ட கற்பிக்கும் முறைகளைப் பயன்படுத்துகிறார்களா?
3. ஆசிரியர்கள் மாணவர்களை கலந்துரையாடலிலும், வகுப்பின் மற்ற நிகழ்வுகளிலும் ஈடுபடச் செய்கிறார்களா?
4. வகுப்பில் படிப்பவர்கள் மத்தியில் உதவி ஆசிரியர்களை நிறுவனம் உருவாக்குகிறதா?
5. (இருக்கைகள், வெளிச்சம், கவனச்சிதறல் இல்லாமை மற்றும் சத்தம் இல்லாமை போன்ற வசதிகளுடன்) வகுப்பறை படிப்பதற்கு ஏற்றதாக இருக்கிறதா?
6. படிக்கும் பாடத்தொடருக்கான புத்தகங்கள் ஒவ்வொரு மாணவரிடமும் இருக்கிறதா?
7. பயிற்சி வேலைகளை நிறைவு செய்யும் அளவிற்கு எல்லா மாணவர்களுக்கும் நன்றாக எழுதப் படிக்கத் தெரிந்திருக்கிறதா? (சான்றிதழுக்குத் தேவையானது)
8. வகுப்பின் கால அட்டவணையின்படி, ஒவ்வொரு பாடத்தொடருக்கும் பயிற்சி வேலைகளைச் செய்வதற்கான நேரத்தை சேர்க்காமல் முப்பது மணிநேர வகுப்புகள் கொடுக்க முடிகிறதா?
9. தேர்வு முறைகள் மாணவர்கள் மற்றவர்களையோ அல்லது புத்தகத்தையோ பார்த்து எழுதாமல் இருக்கும் விதத்தில் உள்ளனவா?
10. ஆசிரியர்கள் மாணவர்களின் வருகையைத் துல்லியமாக பதிவு செய்து வைத்திருக்கிறார்களா? (25%-ற்கு மேலான வகுப்புகளைத் தவறவிடும் மாணவர்களுக்கு மதிப்பெண் கொடுக்கக்கூடாது.)
11. மாணவர்கள் நிறைவு செய்த பயிற்சிவேலை பற்றிய அறிக்கைகளை ஆசிரியர்கள் வைத்திருக்கிறார்களா? (சான்றிதழ் பெற எல்லா பயிற்சி வேலைகளையும் நிறைவு செய்திருக்க வேண்டும். ஒவ்வொரு வகுப்பிற்கான பயிற்சி வேலையும் பயிற்சியின் முடிவில் மாணவரிடம் திருப்பிக் கொடுக்கப்படும் வரை மாணவர்கள் அவற்றை திருத்தும் செய்து மேம்படுத்தலாம்.)
12. உள்ளூர் நிறுவனம் உள்ளூர் பொருளாதார உதவிக்கான அமைப்பை உருவாக்குகிறதா?
13. வெளிப்படைத்தன்மை மற்றும் கணக்கு ஒப்புவித்தலுக்காக உள்ளூர் நிறுவன பொருளாதாரத்தை ஒரு உள்ளூர் குழு நிர்வகிக்கிறதா?

# SGC - யின் ஆன்லைன் உதவி உபகரணங்கள்

## மேய்ப்பர்களின் உலகளாவிய வகுப்பறை செயலி

SGC செயலி ஆப்பிள் ஸ்டோர் மற்றும் கூகுள் ப்ளே-யில் உள்ளது.

செயலி மூலம் எல்லா பாடத்தொடரையும் வாசிக்கலாம் அல்லது பதிவிறக்கம் செய்யலாம். பல்வேறு மொழிகளில் மொழிப்பெயர்ப்பு செய்யப்படும் புத்தகங்களும் செயலியில் சேர்க்கப்பட்டு வருகின்றன.

### SHEPHERDSGLOBAL.ORG

இந்த வலைதளத்தில் பதிவிறக்கம் செய்யக் கூடிய பாடப்புத்தகங்களும், மற்ற உபகரணங்களும் உள்ளன.

## ஆசிரியர் பயிற்சி

இந்த *உள்ளூர் நிறுவனக் கையேட்டை* ஒரு ஆவணமாக பதிவிறக்கம் செய்யலாம். பயிற்சி பாடத்தொடர்களின் வீடியோ பதிப்புகள் ஒவ்வொன்றாகச் சேர்க்கப்பட்டு வருகின்றன.

## ஸ்லைட்ஷோ பதிப்புகள்

ஆங்கில ஸ்லைட்ஷோ பதிப்புகளை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

## விளம்பர வீடியோக்கள்

இந்த வலைதளத்தில் SGC தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அதன் தரிசனத்தையும், பயிற்சியின் தாக்கத்தையும் விவரிக்கும் வீடியோக்கள் உள்ளன.

## பாடத்தொடர்களின் ஆடியோ மற்றும் வீடியோ பதிவுகள்

கற்பிக்கப்படும் பாடத்தொடர்களின் ஆடியோ மற்றும் வீடியோ பதிவுகள் பல்வேறு மொழிகளில் சேர்க்கப்பட்டு வருகின்றன.

# மேய்ப்பர்களின் உலகளாவிய வகுப்பறை பாடத்தொடர் விபரம்

## உபதேச அடித்தளங்கள் பாடத்தொடர்கள்

### கிறிஸ்தவ நம்பிக்கைகள்

இது ஒரு முறையான இறையியல் பாடத்தொடராகும். இதில், வேதாகமம், தேவன், மனிதன், பாவம், இரட்சிப்பு, பரிசுத்த ஆவி, சபை, மற்றும் கடைசிக் கால நிகழ்வுகளைப் பற்றிய கிறிஸ்தவ உபதேசங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

### ரோமர் நிருபம்

இந்தப் பாடத்தொடர், ரோமர் நிருபத்தில் உள்ளபடி இரட்சிப்பு மற்றும் நற்செய்திப்பணியின் இறையியலை கற்பிக்கிறது. சபையில் சர்ச்சையை ஏற்படுத்திய பல பிரச்சனைகளும் இதில் விவாதிக்கப்படுகின்றன.

### கடைசிக்கால நிகழ்வுகள்

இந்தப் பாடத்தொடர், வேதாகமத்திலுள்ள தானியேல் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் ஆகிய புத்தகங்களுடன் மற்ற தீர்க்கதரிசன வேதப்பகுதிகளையும் கற்பித்து, கிறிஸ்துவின் வருகை, இறுதி நியாயத்தீர்ப்பு, மற்றும் தேவனுடைய நித்திய ராஜ்யம் போன்ற முக்கியமான உபதேசங்களை வலியுறுத்துகிறது.

### உபதேசமும், பரிசுத்த வாழ்க்கையைக் கைக்கொள்ளுதலும்

இந்தப் பாடத்தொடர், தேவன் ஒரு கிறிஸ்தவனிடத்தில் எதிர்பார்க்கிற மற்றும் அவனுக்கு அருளிச் செய்கிற பரிசுத்த வாழ்க்கையைப் பற்றிய விபரத்தை வேதாகமத்தின் அடிப்படையில் கொடுக்கிறது.

### உபதேசமும் சபைகூடிவருதலும்

இந்தப் பாடத்தொடர், சபைக்கான தேவனுடைய அமைப்பு மற்றும் திட்டத்தையும், சபை உறுப்பினர்த்துவம், ஞானஸ்நானம், கர்த்தருடைய பந்தி, தசமபாகம், மற்றும் ஆவிக்குரிய தலைமைத்துவம் போன்ற வேதாகம பாடங்களை விளக்குகிறது.

# வேதாகம ஆய்வு பாடத்தொடர்கள்

## பழைய ஏற்பாட்டு ஆய்வு

இந்தப் பாடத்தொடர், பழைய ஏற்பாட்டின் 39 புத்தகங்களின் உள்ளடக்கத்தையும், போதனைகளையும் கற்பிக்கிறது.

## புதிய ஏற்பாட்டு ஆய்வு

இந்தப் பாடத்தொடர், புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களின் உள்ளடக்கத்தையும், போதனைகளையும் கற்பிக்கிறது.

## வேதாகம வியாக்கியானக் கோட்பாடுகள்

இந்தப் பாடத்தொடர், தேவனுடனான நம்முடைய வாழ்க்கையையும், உறவையும் வழிநடத்தும் விதத்தில் வேதாகமத்தை முறையாக வியாக்கியானம் செய்வதற்கான கோட்பாடுகளையும், முறைகளையும் கற்பிக்கிறது.

# சுவிசேஷம் அறிவித்தல் மற்றும் சீஷராக்குதல் பாடத்தொடர்கள்

## விசுவாசக் காப்பு - அறிமுகம்

இந்தப் பாடத்தொடர், கிறிஸ்தவ உலகக் கண்ணோட்டத்திற்கான விஞ்ஞான, சரித்திர மற்றும் தத்துவ அடித்தளங்களைக் கற்பித்து, அதன் மூலம் கிறிஸ்தவ விசுவாசம் எப்படி அறிவுத்திறனுடனும், எதார்த்தத்துடனும் சீராக ஒத்திருக்கிறது என்பதைக் காண்பிக்கிறது.

## உலக மதங்கள் மற்றும் வழிபாட்டு மரபுகள்

இந்தப் பாடத்தொடர், சுவிசேஷக விசுவாசிக்கு பதினெட்டு மத அமைப்புகளின் போதனைகள் மற்றும் அவற்றிற்கான சரியான பதில்களைப் புரிய வைக்கிறது.

## வேதத்தின் அடிப்படையில் சுவிசேஷம் அறிவித்தல் மற்றும் சீஷராக்குதல்

இந்தப் பாடத்தொடர், சுவிசேஷம் அறிவிக்கும் முறைகளை வழிநடத்தும் வேதாகமக் கோட்பாடுகளை வழங்குகிறது. அது, சுவிசேஷம் அறிவிக்கும் முறைகளை விவரித்து, புதிய விசுவாசிகளை சீஷர்களாக உருவாக்கப் பயன்படுத்தும் பாடங்களை வழங்குகிறது.

## ஆவிக்குரிய உருவாக்கம்

இந்தப் பாடத்தொடரில், மாணவர்கள் இயேசுவின் மனப்பான்மைகளைக் கொண்டிருக்கவும், இயேசு தம் பிதாவுடன் ஐக்கியம் கொண்டிருந்தது போல அவர்களும் ஐக்கியம் கொள்ளவும்,

இயேசுவைப் போலத் தங்களைத் தாழ்த்தவும், இயேசுவின் தனிப்பட்ட மற்றும் ஆவிக்குரிய ஒழுங்குகளைக் கைக்கொள்ளவும், இயேசுவைப் போல பாடுகளைச் சகிக்கவும், இயேசுவால் உருவாக்கப்பட்ட கிறிஸ்தவ சமுதாயத்தில் ஈடுபடவும் கற்றுக்கொள்கிறார்கள்.

### நடைமுறை கிறிஸ்தவ வாழ்க்கை

இந்தப் பாடத்தொடர், பணத்தைக் கையாளுதல், உறவுகள், சுற்றுச்சூழல், அரசாங்கத்துடனான தொடர்பு, மனித உரிமைகள் மற்றும் நடைமுறை வாழ்க்கையின் இதர பகுதிகளைப் பற்றிய வேதக் கோட்பாடுகளை பிரயோகிக்கிறது.

### கிறிஸ்தவ திருமணமும், குடும்பமும்

இந்தப் பாடத்தொடர், வாழ்க்கையின் நிலைகளில் மனிதன் அடையும் வளர்ச்சி பற்றிய கிறிஸ்தவ கண்ணோட்டத்தைக் கொடுத்து, குடும்ப பொறுப்புகள் மற்றும் உறவுகளுக்கு வேதக் கோட்பாடுகளை பிரயோகிக்கிறது.

## கிறிஸ்தவத் தலைமைத்துவப் பாடத்தொடர்கள்

### ஊழியத் தலைமைத்துவம்

இந்தப் பாடத்தொடர், மதிப்புகளைக் கண்டறிதல், நோக்கத்தை உணருதல், தரிசனத்தைப் பகிர்ந்து கொள்ளுதல், இலக்குகளை நியமித்தல், யுக்திகளைத் திட்டமிடுதல், நடவடிக்கை எடுத்தல் மற்றும் சாதனை செய்தல் போன்ற செயல்முறைகள் மூலம் தலைவர்களுக்கு நிறுவனங்களை வழிநடத்தக் கற்றுக்கொடுத்து, கிறிஸ்தவ பண்புகளை வலியுறுத்துகிறது.

### இயேசுவின் வாழ்க்கையும், ஊழியமும்

இந்தப் பாடத்தொடர், 21-ஆம் நூற்றாண்டின் ஊழியம் மற்றும் தலைமைத்துவத்திற்கு மாதிரியாக இயேசுவின் வாழ்க்கையை ஆய்வு செய்கிறது.

### தொடர்புகொள்ளுதலின் கோட்பாடுகள்

இந்தப் பாடத்தொடர், தொடர்பு கொள்ளுதலின் இறையியல், திறம்படப் பேசும் முறைகள், மாற்றம் வேதாகமப் பிரசங்கங்களை ஆயத்தம் செய்து வழங்குதல் ஆகியவற்றைக் கற்பிக்கிறது.

### கிறிஸ்தவ ஆராதனை - அறிமுகம்

இந்தப் பாடத்தொடர், எப்படி ஆராதனை ஒரு விசுவாசியுடைய வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை விளக்கி, தனிநபர் மற்றும் சபை ஆராதனை வழக்கங்களை வழிநடத்தும் கோட்பாடுகளைக் கொடுக்கிறது.

# சபை சரித்திரம் பாடத்தொடர்கள்

## சபை சரித்திர ஆய்வு I

இந்தப் பாடத்தொடர், ஆதித் திருச்சபை காலம் முதல் சீர்திருத்த காலம் வரை சபை எவ்வாறு தன் பணியை நிறைவேற்றி, அவசியமான உபதேசங்களைப் பாதுகாத்து வந்திருக்கிறது என்பதை விவரிக்கிறது.

## சபை சரித்திர ஆய்வு II

இந்தப் பாடத்தொடர், சீர்திருத்த காலம் முதல் நவீன காலம் வரை சபை எவ்வாறு விரிவடைந்து, சவால்களை எதிர்கொண்டு வருகிறது என்பதை விவரிக்கிறது.